புத்தக நண்பன்

12 JUN 1965

மலர் 1 இதழ்: 4 செப்டம்பர் 1962

ஆசிரியர்:

வி. சுந்தரராஜ் நாயுடு, M.A., B.L., T.D

இந்த இதழில்

செய்தி குறிப்புகள்

குழந்தைகளுக்கு எழுதுவது...
—அழ. வள்ளியப்பா

அச்சகத்தார் சங்கங்கள்
—ஆர். வெங்கடேஸ்வரன்

வெளிநாடுகளில் இராமாயணம்
—நெடியம் இராகவன்

முடிவிலே ஆரம்பம்
—ஸ்ரீகாந்தா

தென்மொழி எழுத்தாளர் அறிமுகம்:
டாக்டர் கே. வி. புட்டப்பா
மகம்மது பஷீர்
சிவசங்கர சுவாமி

புத்தகப் பூங்கா

*

புத்தக நண்பன்

தென்மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டெர்லிங் ரோட்,
சென்னை-34.

*

ஆண்டுச் சந்தா : ரூ. 2/-
தனிப் பிரதி : 50 காசு

*

செய்திக் குறிப்புகள்

கல்விப் பணிக்கு உலகத் திட்டம்

உலகக் கல்விப் பிரச்சனையைக் கலந்து ஆலோசிக்கப் பன்னிரண்டு நாடுகளின் பிரதிநிதிகள் அண்மையில் 'யுனெஸ்கோ' வின் தலைமைப் பீடமான பாரிஸ் மாநகரில் கூடினர். அடுத்த பத்தாண்டுகளில் உலகத்தில் படிக்காத மக்களின் தொகையைச் சரி பாதியாகக் குறைப்பதற்கான திட்டமொன்றை அவர்கள் தயாரித்துள்ளனர். இன்று உலகில் சுமார் 70 கோடி—அதாவது உலகத்து முதியவர்களில் சரிபாதி பேர் எழுதப் படிக்கத் தெரியாதவராக உள்ளனர். மக்கட் தொகை பெருகிவரும் வேகத்தை நோக்கினல் படிக்கத் தெரியாத மக்களின் எண்ணிக்கையும் அளவு கடந்து பெருகிக்கொண்டே வருகிறது என்று வல்லுநர்கள் கருத்தை வெளியிட்டனர்.

பத்து நாட்கள் கூடி ஆலோசித்த பின்னர் வல்லுநர்க் குழு ஒன்று உலகக் கல்வித் திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தந்துள்ளது. 'ஐக்கியநாடுகள் வளர்ச்சித் தலைமுறை' என்ற அடுத்த தலைமுறையில் மனித சமூகத்தின் அடிப்படை எதிரிகளான நோய், பசி, அறியாமை, வறுமை ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதில் ஐக்கிய நாடுகள் அமைப்பும் மற்றும் அதன் பல்வேறு அங்கங்களும் ஒன்றுபட்டு முழு-மூச்சுடன் ஈடுபடவேண்டும் என்று அவர்கள் அறிவித்தனர்.

அடிப்படைக் கல்வியுடன், முதியோர் கல்வியையும் பரப்புவதில் கண்ணும் கருத்து மாக இருக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். கல்வி அறிவில்லாத முதியோர் நிறைந்துள்ள பகுதிகளில் அடிப்படைக் கல்வியும் (சிறுவரிடையே) பரவ முடியாமற் போகிறது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டனர். கல்வி அறிவில் லாதவர்களில் பெரும்பாலோர் பெண்களாக இருப்பது 'இன்றைய இவ்வாழ்க்கையின் வருந்தத்தக்க விளைவுகளில் ஒன்ருக இருக் கிறது' என்று அவர்கள் கூறினர்.

உலகக் கல்வித் திட்டம் வெற்றி யடைய சுமார் 180 கோடி டாலர்கள் செலவாகும் என்று கணக்கிட்டுள்ளனர். உலக நாடுக ளின் மொத்த வருமானத்தில் இது 0·15 சதவீதமே ஆகும். அறியாமையை ஒழிப் பது அந்தந்த நாட்டரசாங்கத்தின் கட மையே எனினும், உலக நாடுகளும் இப் பணியில் ஒன்றுக்கொன்று உதவ வேண்டு மென்று இக்குழு சிபாரிசு செய்தது.

மற்றும் அவர்கள் அறிக்கையில் கல்வி பரப்புதல், கல்வித் திட்டங்கள் முதலியவற் றின் பல்வேறு கூறுகளையும் ஆய்ந்து குறித் துள்ளனர். அடுத்த நவம்பர் மாதத்தில் கூட இருக்கும், 'யுனெஸ்கோ'வின் பொது மாநாட்டில் இந்த அறிக்கை வைக்கப்படும்.

குருடர்களுக்கு நூல் நிலையம்

போரில் உடல் நலிவுற்று நலம் பெற்று வரும் வீரர்கள் குருடர்களுக்கு உதவுவதற் காகச் சுமார் 10 இலட்ச அடி நீளமுள்ள பதிவு நாடா 'நூல் நிலையம்' ஒன்றைத் தயாரித்துள்ளனர். மெஸ்சாசுஸெட்ஸில் (அமெரிக்கா) மேற்கு ராக்ப்பரியில் மருத் துவ நிலைய மொன்றில் இவ்வாறு தயாரிக் கப்பட்ட பதிவு நாடாவில், இலக்கியம், அறி வியல், தத்துவம், தொழில் நுணுக்கங்கள், கணக்கியல், சட்டம், மருத்துவம் முதலிய பல துறைகளும் இடம் பெற்றுள்ளன.

பருவ வயதினர் உளவியல் மாநாடு

பருவ வயதினர் (Adolescent) உளவியல் பிரச்சனைகள் குறித்த முதல் மாநாடு 'யுனெஸ்கோ'வின் சார்பில் பாரிசில் ஜூன் 4–8தேதிகளில் நடைபெற்றது. அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, இந்தியா முதலான பல்வேறு நாடுகளிலிருந்து உளவியலின் பல்வேறு பிரிவுகளில் வல்லுநர்கள் பல் வேறு அரசாங்கங்களின் சார்பிலும், தனிப் பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் சார்பிலும் இம்மாநாட்டில் பங்கு கொண்டனர்.

பருவ வயதினர் உளவியல் குறித்த பல் வேறு நாடுகளில் இயற்றப்பட்ட ஆராய்ச்சி களையும் குறிப்பாக உள நலிவுற்ருேரைச் சீர்திருத்தும் முயற்சிகளில் வெற்றிகளைக் குறித்தும் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டனர்.

தவருன பாதைகளில் செல்லும் பருவ வயதினர் உளத்தன்மை குறித்து விவாதிக் கப்பட்டது. இவர்களில் பல்வேறு வகையி னர் உள்ளனர் என்பது பலராலும் குறிப் பிடப்பட்டது. 'தனக்கும், தன் குடும்பம், சமூகத்துக்கும் அளவு கடந்த துன்பத்தைத் தேடிக்கொள்ளும்' ஒரு வகைப் பருவ வயதி னரைக் குறித்து லண்டனிலிருந்து வந்த உளவியல் வல்லுநர் குறிப்பிட்டார்.

ஓவியக் கலைப் பயிற்சி 'ஸ்லைடு'கள்

பள்ளிகள், பல்கலைக் கழகங்கள், ஓவியக் கழகங்கள், மற்றும் ஓவியக்கலை நிலையங்க ளுக்கும் பயன்படுவதற்கென, ஓவியக் கலைப் பயிற்சி 'ஸ்லைடு'களை 'யுனெஸ்கோ' தயாரித் துள்ளது. உலகத்தின் பல்வேறு பகுதிகளி லும் ஓவியக் கலை எவ்வாறு பயிற்றுவிக்கப் படுகிறது என்பது இந்த 'ஸ்லைடு'களாலும், அவற்றுடன் தரப்பட்டுள்ள வாசகங்களா லும் தெளிவாக விளங்கும்.



கிருஷ்ணராஜசாகர் எழுத்தாளர் முகாமில் கூடிய பல்வேறு மொழி எழுத்தாளர்கள். வலதுபக்கத்திலிருந்து மூன்றாவதாக இருப்பவர் முகாமின் பொதுத் தலைவர் டி. எஸ். கர்க்கி

'விளையாடு, ஆராய்ச்சி செய், கூர்ந்து பார், உண்டாக்கு' என்ற தலைப்பிட்ட முதற் பிரிவு 'ஸ்லைடு'கள் ஓவியங்களின் அடிப் படைப் பயிற்சியையும் வண்ண உணர்ச்சி யையும் பயிற்றுவிக்கும். ஓவியக் கலையின் பல்வேறு நுணுக்கங்களைப் பயிற்றுவிப்பது டன், மாணவர்களின் சொந்தப் படைப்புத் திறனையும் ஊக்குவிக்கும் வகையில் இவை அமைந்துள்ளன. இரண்டாவது பிரிவான 'மூன்று அலகு ஓவியம்' தொடர்பான 'ஸ்லைடு'கள் ஏற்கனவே பயிற்சி பெற்ற மாணவர்க்குச் சிற்பக் கலையையும் பயிற்று விக்கும் முறையில் அமைந்துள்ளன. பருவ வயதினரின் அழகு ரசனை உணர்ச்சியை ஊக்கி அதை ஆக்க வழியில் பயன்படுத்த இவை பெரிதும் துணை புரியும். ஓவியக் கலையைப் பயிற்றுவிப்பதில் உள்ள முக்கியப் பிரச்சனைகளான வண்ணம், ஒளி, தன் படம் தானே வரைதல்; மற்றும் களிமண், மரம், கல், கண்ணாடி முதலிய சிற்ப மூலப் பொருள்களின் தன்மைகளை நன்கு விளக் கும் மூன்றாம் பிரிவு 'ஸ்லைடு'களும் தயாரிக் கப்படுகின்றன.

இந்த 'யுனெஸ்கோ' ஓவியப் பயிற்சி 'ஸ்லைடு'கள், 'UNESCO (D. P. V.). Place de Fontenoy, Paris 7e; France' என்ற முகவரியுள்ள 'யுனெஸ்கோ' தலைமை அலு வலகத்திலிருந்தும், 'யுனெஸ்கோ' வெளி

யீடுகளின் ஏஜண்டுகளிடமிருந்தும் வாங்கிக் கொள்ளலாம்.

அகில இந்திய எழுத்தாளர் முகாம்

இந்தியாவிலேயே முதன் முறையாக, பல்வேறு பகுதிகளில் வாழும் பல்வேறு மொழி எழுத்தாளர்கள் ஒரு முகாமில் கூடி வாழ ஓர் அரிய வாய்ப்பு அண்மையில் தரப் பட்டது. மத்திய விஞ்ஞான ஆராய்ச்சி, கலைத் துறை அலுவல்கள் அமைச்சரகம் இந்த முகாமை மைசூரை அடுத்த கிருஷ்ண ராஜசாகரில் ஏற்பாடு செய்தது. எழில்மிக்க பிருந்தாவன சோலையில் அமைந்துள்ள பிருந்தாவன 'ஹோட்டலி'ல் எழுத்தாளர் கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய அமைச்சர் பேராசிரியர் ஹுமா யூன் கபீர் அவர்களின் கூற்றுப்படி 'சமுதா யத்தின் தலை சிறந்த உணர்ச்சி ஊற்றுக் கள்' அங்குப் பதினைந்து நாட்கள் கூடி வாழ்ந்தனர். ஜுலை 18 ஆம் நாள் இந்த முகாம் துவக்கப் பட்டது. அசாமிலிருந்து கேரளாவரை, பல்வேறு பகுதிகளிலிருந்து பதினைந்து தலை சிறந்த எழுத்தாளர்கள் இதில் பங்கு கொண்டனர். அவர்கள் விவா திப்பதற்கென தனிப்பட்ட தலைப்புகளோ, விதி முறைகளோ அமைக்கப்படவில்லை. அவரவர்கள் விரும்பிய பிரச்சனைகளைக் குறித்து விரும்பிய வண்ணம் கலந்து பேச லாம் என்று சொல்லப்பட்டது. சுதந்திர மாகச் சேர்ந்து வாழ்ந்து, மனம் விட்டுப் பழகி, பொதுவான பிரச்சனைகளைக் கலந்தா லோசிக்கும் புத்தனுபவத்துடன் அவர்கள் பிரியும்பொழுது புதியன பல அறிந்தும், மற்றைய எழுத்தாளரைப் பற்றிய உயர்ந்த பலவற்றைத் தெரிந்துகொண்டும் எழுத்தா ளர் பிரிந்தனர்.

டாக்டர் டி. எஸ். கர்க்கி என்னும் புகழ் பெற்ற கன்னடக் கவிஞர் ஒருவரை எழுத் தாளர் தம் முகாமின் பொதுத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், மைசூர் கவர்னர் திரு. ஜெயராம்ராஜ வுடை யர் அவர்களும் முகாமிற்கு வந்திருந்து சில மணி நேரம் எழுத்தாளர்களுடன் உரை யாடினர்.

'தாகூரும் உலகமும்', 'இன்றைய காஷ் மீரி இலக்கியம்', 'அசாமிய மொழியும் இலக் கியமும்', 'இந்திய ஆங்கில எழுத்தாளர் கள்', 'இசையும் தேசிய ஒருமைப்பாடும்', 'எழுத்தாளரின் பிரதி உரிமை', 'குழந்தை இலக்கியம்', 'தமிழிலக்கிய வரலாறு' போன்ற தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரை கள் படிக்கப்பட்டன. மற்றும் 'பொது மொழி', 'பொது எழுத்து முறை', 'உணர்ச்சி, அறிவுத் துறை ஒருமைப்பாடு' முதலிய பல பிரச்சனைகளும் விவாதிக்கப் பட்டன.

முகாமின் பிரிவுப் பேருரையைப் பேராசி யர் கபீர் அவர்கள் நிகழ்த்தியபொழுது "இத்தகைய முகாமில் கூடி வாழ்ந்து கருத் துக்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் ஒரு வரைப் புரிந்துகொள்ளவும், பல்வேறு மொழி இலக்கியங்கள் வளம்பெற்று வளர வும் வாய்ப்பளிக்கும்" என்று குறிப்பிட்டார்.

முகாமில் பங்குகொண்டோர் சில உல் லாசச் சுற்றுலாக்களிலும் கலந்துகொண்ட னர். மகிழ்ச்சிகரமாகவும் பயனுள்ள வகை யிலும் நாட்களைக் கழித்த பின்னர் நாட்கள் வெகு விரைவில் ஓடிவிட்டனவே என்ற உணர்ச்சியுடன் எழுத்தாளர்கள் பிரிந்து சென்றனர்.

* * *

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு

எழுத்தாளர் உலகில் மற்றொரு சுவை யான நிகழ்ச்சி யொன்று அண்மையில் நடைபெற்றது. 'பென்' (P.E.N.) இந்திய நிலையம் அகில இந்திய எழுத்தாளர் மாநாடு ஒன்றை மைசூரில் ஆகஸ்ட் 3 லிருந்து 6 ஆம் நாள் வரை நடத்திவைத்

திருவனந்தபுரத்தில் டிரஸ்ட் காட்சி அறையில் அண்மையில் நடைபெற்ற குழந்தை நூல் வாரத் துவக்க விழாவில் எடுக்கப்பட்ட புகைப் படம்.

தது. இவ்விழாவை ஆகஸ்ட் 3 ஆம் நாள் மாலை இந்திய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் துவக்கிவைத்தார். மைசூர்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நிக்கம் வரவேற்புரையாற்றினார். ஜனாதிபதி பேசிய பின்னர் மேடம் சோஃபியா வாடியா, பேராசிரியர் ஹுமாயூன் கபீர் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா தூதராலயப் பிரதிநிதிகளும் உரையாற்றினர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து எழுத்தாளப் பெருமக்கள் வந்திருந்து சிறப்பித்தனர்.

4, 5, 6 ஆம் தேதிகளில் முறையே மூன்று கருத்தரங்குகள் நடைபெற்றன. 'எழுத்தாளர் கண்களில் இன்றைய இந்தியா' என்ற தலைப்பில் நடந்த முதல்நாள் கருத்தரங்கு டாக்டர் சி. பி. ராமஸ்வாமி அய்யர் தலைமையில் நடைபெற்றது. இரண்டாவது நாள் டாக்டர் மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் தலைமையில் 'இந்திய இலக்கியத்தில் நகைச்சுவை' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது மூன்றாவது நாள் மேடம் சோஃபியா வாடியா தலைமையில் 'இலக்கியத்தில்கிழக்கு– மேற்குப் பிரச்சனைகள்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இம் மூன்று கருத்தரங்குகளிலும் நாட்டின் பல்வேறு மொழி எழுத்தாளப் பெருமக்கள் பங்கேற்று அரிய உரைகளாற்றினர். இறுதி நாள் மாலை பல்கலைக் கழகத் துணைவேந்தர் நிக்கம் அவர்கள் பிரதிநிதிகளுக்குத் தேநீர் விருந்தளித்தார். அதன் பின்னர் மைசூர் கவர்னர் ஜெயசாம்ராஜ வுடையர் பிரிவுப் பேருரை நிகழ்த்திச் சிறப்பித்தார்.

உங்களுக்குத் தெரியுமா ?

இயந்திர ஆசிரியர்

ஜோஜெஃப் ஃபர்ஜெஜ் (Jozsef Furjez) என்ற ஹங்கேரிய நாட்டினர் ஓர் இயந்திர ஆசிரியரை உருவாக்கியுள்ளார். பின்னணி இசையுடன், தேவையான விளக்கப் படங்களைத் திரையில் போட்டுக் காட்டி விரிவுரையாற்றும் இந்த இயந்திரம், தன் மாணவர்களைக் கேள்விகள் கேட்டுச் சரியான விடைகளையும் சுட்டிக்காட்டும். இதன் அமைப்பு முறை மிகவும் எளிமையானதே. அந்த இயந்திரத்துக்குள் பொருத்திவைக்கப் பட்டுள்ள பதிவு நாடாவில் விரிவுரையும், பின்னணி இசையும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு நாடாவில் சில குறிப்பிட்ட இடங்கள் வந்த உடன், அந்த இயந்திரத்திலுள்ள திரைப்படப் பகுதி வேலை செய்ய ஆரம்பிக்கிறது. விளக்கத்திற்காகத் திரையில் படங்களைப் போட்டுக் காட்டும். கேட்க வேண்டிய வினாக்களையும் திரையின்மீது எழுதியும், ஒவ்வொன்றுக்கும் தரக்கூடிய மூன்று விடைகளையும் போட்டுக் காட்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் தம்மருகில் உள்ள, தீப்பெட்டி அளவுள்ள ஒரு பெட்டியில் உள்ள மூன்று பொத்தான்களில் ஒன்றை அழுத்துவர். அப்பெட்டி இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சரியான விடைக்கான பொத்தானை அழுத்தியவர் பெட்டி எண்ணை இயந்திரம் குறித்துக் கொள்கிறது. பிறகு தொடர்ந்து விரிவுரையாற்றத் தொடங்கும்.

மின்னணு மருத்துவச்சி

பிரிட்டனில் உள்ள மருத்துவச்சிப் பற்றுக் குறையை நிறை செய்ய, விஞ்ஞானிகள் ஒரு புதுக் கருவியைத் தயாரித்துள்ளனர். நோயாளிகளின் நாடித் துடிப்பு, மூச்சு விகிதம், இரத்த அழுத்தம், உடல் வெப்ப நிலை முதலியவற்றைப் பதிவு செய்து ஒரு மைய இயந்திரத்துக்குச் செய்தி அனுப்பிவிடும் இக்கருவி. மருத்துவச்சியினருக்கு வேலை இல்லாமல் செய்வதற்கல்ல இந்தக் கருவி; அன்றாட அலுவல்களில் அவர்களுக்குச் சிறிது உதவி செய்யவே ஆகும்.

பாலையில் தண்ணீர்

வடகிழக்கு சிரியாப் பாலைவனப் பகுதியில், நிலத்துக் கடியில் பாறைகளுக் கிடையில் தேங்கியுள்ள நீரைப் பூமி அடிக்குழாய்களின் மூலம் வெளிக்கொணர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தகங்களைக் குறித்து

(1) ஆங்கிலம், தமிழ் மொழிகளில் பெண்களைவிட ஆண் வாசகர்கள் குறைவானவரே உள்ளனர்.

(2) ஒருவருக்கு இருக்கும் குழந்தைகளும், அவர் படிக்கும் புத்தகங்களும் எதிர் விகிதத்தில் உள்ளன. பெற்றோரின் ஓய்வு நேரத்தைக் குழந்தைகள் எடுத்துக்கொண்டுவிடுகின்றன.

(3) புத்தகங்களை வாங்கித்தான் படிக்க வேண்டும் என்பதில்லை, நண்பர்களிடம் இரவல் வாங்கிப் படிப்பது பெரும்பாலானவர் பின்பற்றும் பழக்கமாகும்.

(4) நான்கு தென்மொழிகளிலும் சுமார் 30 சதவிகித வாசகர்கள் மாதாமாதம் புத்த

கம் வாங்குவதற்கென தொகை ஒதுக்கி வைக்கின்றனர்; சுமாராக ரூ. 5/- ஒரு மாதத்திற்கு என ஒதுக்குகின்றனர்.

நூலாசிரியர்களைக் குறித்து

(1) குழந்தைகளுக்கு இலக்கியம் படைத்தவர்களில் புகழ்பெற்ற சிலர் குழந்தைப் பேறு இல்லாதவராக இருந்திருக்கின்றனர். 'ஆலிஸ் இன் வொண்டர்லாண்ட்' என்ற சிறந்த குழந்தை நூலை இயற்றிய லூயி கரோல் என்பவர் 66 வயது வரை வாழ்ந்தும் திருமணம் செய்துகொள்ளவே இல்லை.

குழந்தைகளுக்கான கதைகள் இயற்றுவதில் புகழ்பெற்ற ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சன் வாழ்க்கை முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருந்தார்.

'ரிப் வான் விங்கிள்' என்ற புகழ்பெற்ற நூலை இயற்றிய வாஷிங்டன் இர்விங் தாம் காதலித்த பெண் இறந்துவிட்டதால், திருமணமே செய்துகொள்ளாமல் வாழ்க்கையைக் கழித்துவிட்டார்.

———

தன்னுடைய ஆத்ம ரகசியங்களை எந்த அளவில் வெளிப்படுத்துகின்றானோ அந்த அளவில்தான் ஒருவன் நமக்கு மிகவும் அருமையுடையவனும் முக்கியமானவனும் ஆகிறான்.

—டால்ஸ்டாய்.

... ...

தன் தொழிலில் வெட்கப்படுகிற எந்த எழுத்தாளனையும் நான் கண்டதில்லை.

—தேக்கரே.

... ...

இலக்கியத்தில் ஆழ்வது இளமையில் பயன் தருகிறது, முதிர்ந்த வயதில் மனமகிழ்ச்சி கொடுக்கிறது, செல்வ நிலையில் ஒப்பனை செய்கிறது, ஏழ்மையில் ஆறுதலளிக்கிறது, வீட்டில் பெரு மகிழ்ச்சியும், வெளிநாட்டில் தடை இல்லாத மன அமைதியையும் தருகிறது.

—சிசரோ.

குழந்தைகளுக்கு எழுதுவது....

அழ. வள்ளியப்பா

குழந்தைகள், எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தவுடனே, கையிலே கிடைக்கும் எந்தப் புத்தகத்தையும் அல்லது எந்தப் பத்திரிகையையும் படித்துப் பார்க்க முயலுகின்றனர். படிப்பது என்பது அவர்களைப் பொறுத்தவரையில் செயற்கரிய ஒரு செயலே. கண்ணைக் கவரும் வண்ணப் படங்களுடனும், அழகிய அச்சு அமைப்புடனும் நூற்றுக்கணக்கான குழந்தைப் புத்தகங்கள் பிற நாடுகளில் தயாராவதை நாம் அறிவோம். படிக்கத் தெரியாத மிகச் சிறு குழந்தைகளுக்குப் படங்களைக் காட்டிப் பெற்றோர்கள் கதை சொல்லுகின்றனர். எந்த நாட்டிலும், முக்கியமாக இத்துறையில் பின் தங்கியுள்ள நம் நாட்டில், குழந்தைகளுக்கு எழுதுவதற்கு நிறைய வாய்ப்புள்ளது.

பெரியவர்களின் சிறிய உருவங்களாகக் குழந்தைகளை எழுத்தாளர்கள் கருதக் கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். குழந்தை உலகமே ஒரு தனி உலகம். அவர்களுடைய உணர்ச்சி, சூழ்நிலை, கற்பனை யாவும் பெரியவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. 'நாமும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் தாம்' என்பதை மறக்காத ஒவ்வொருவரும் இதை ஆமோதிப்பார்கள் என நம்புகிறேன்.

நம் நாட்டைச் சேர்ந்த பெரும்பாலான குழந்தைகள், இந்தியா விடுதலை பெற்ற பின்னரே பிறந்தவர்கள் அல்லது விடுதலைக் குப் பிறகே கல்விபயிலத் தொடங்கியவர்கள் என்பது நினைவுகூரத்தக்கது. கடந்த பத்தாண்டுகளாக, இந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் குழந்தை இலக்கிய ஆர்வம் வளர்ந்து வருகிறது என்பதை நாம் அறிகிறோம். நூலாசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள், பதிப்பாளர்கள் முதலியோர் குழந்தை இலக்கிய வளர்ச்சி கருதிப் பற்பல முயற்சிகளிலும், சோதனைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும் குழந்தை இலக்கியத்திற்குத் திட்டமான ஒரு வடிவம் அமைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. இத்துறையில் செய்யப்படும் எம் முயற்சியும் பயனுள்ள-வழிகாட்டும் ஒரு முயற்சியாகவே அமையும்.

நமது மரபு, பண்பாடு முதலியவற்றைப் போலவே நம் குழந்தை இலக்கியமும் மிகப் பழமை வாய்ந்தது. நாடோடிக் கதைகள், நாடோடிப் பாடல்கள், புராணக் கதைகள் முதலியவை நீண்ட நெடுங்காலமாக நம் நாட்டில் வழங்கி வருகின்றன. அச்சிட்ட புத்தகங்களாக இல்லாது போயினும், வாய்மொழியாகப் பரம்பரை பரம்பரையாக வழங்கிவரும் இக்கதைகள் படுக்கப்போகு முன் குழந்தைகளுக்குக் கூறும் கதைகளாக இருந்து வந்தன. நம்மில் பலர் இக்கதைகளைச் சிறுவயதில் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். அக்கதைகளை நாமும் நம் குழந்தைகளுக்கும், நம் குழந்தைகளின் குழந்தைகளுக்கும் கிடைக்கும் வகையில் அச்சிலே தரக் கடமைப்பட்டுள்ளோம். ஒருமித்த பண்பாடு ஓங்குதற்கு இது மிகவும் அவசியம் என்று உணர்கிறேன்.

குழந்தைகள், பெரியவர்களின் சிறிய உருவங்களல்ல என்று நான் கூறியபோதிலும், அவர்களுக்கான இலக்கியத்திலும் பெரியோருக்கான இலக்கியத்தைப் போலவே

பல பிரிவுகள் உள்ளன. சில பிரிவுகள், மற்றவற்றைவிட மிகவும் பிரபலமா யிருப்பதும் உண்மையே. அண்மையில் 'சிறுவர் படிக்கும் பழக்கம்' பற்றித் தமிழ்நாட்டில் நடத்திய ஆராய்ச்சியில் சில விவரங்கள் வெளியாயின. எல்லா வயதுக் குழந்தைகளும் கதைகளை — முக்கியமாக, நகைச் சுவைக் கதைகளைப் படிப்பதிலும், துப்பறியும் கதைகள், வீரதீரச் செயல் நிறைந்த கதைகள் முதலியவற்றைப் படிப்பதிலும் பெரு விருப்புக் கொண்டுள்ளனர். பிரயாணப் புத்தகங்கள், நாடோடிப் பாடல்கள், பொழுதுபோக்கு சம்பந்தமான புத்தகங்கள் ஆகியவற்றைப் படிப்போர் தொகை மிகவும் குறைவு.

நாம் சிறுவராயிருந்தபோது, பள்ளிப் பாடப் புத்தகங்களைத் தவிர, மற்றப் புத்தகங்களை அரிதாகவே காணமுடிந்தது. பள்ளி நூல் நிலையத்தில் இருந்த புத்தகங்களும் பெரும்பாலும் அக்காலப் பயிற்சி மொழியாகிய ஆங்கிலத்திலே இருந்தன. தொழில், சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் விரைந்து முன்னேறி வரும் நம் நாட்டில், குழந்தைகள் புதிய புதிய செய்திகளைத் தெரிந்துகொள்வதில் காட்டும் அக்கறையையும், காலத்தோடு ஒட்டிச் செல்லவேண்டும் என்ற அவர்களின் துடிதுடிப்பையும் காண மகிழ்ச்சி பெருகுகிறது. இன்றைய எழுத்தாளர்கள் தங்களால் இயன்றதைக் குழந்தை உலகுக்கு அளிக்க இது நல்லதொரு வாய்ப்பென்றே கூறவேண்டும்.

குழந்தைகளில் பல்வேறு வயதுப் பிரிவுகள் இருப்பதால், எல்லோருக்கும் ஒரே மாதிரிக் குழந்தை இலக்கியம் படைக்க முடியாது. வயதுப் பிரிவுகளுக்கு ஏற்ப, கிரகிக்கும் சக்தி மாறுபடுகிறது. எந்த வயதுப் பிரிவினருக்கு நாம் எழுதுகிறோமோ, அவர்களுக்கு ஏற்றபடி பொருள், சொல் அமைப்பு, சொல்லும் முறை முதலியன இருக்கவேண்டும். உதாரணமாக, மிகச் சிறு குழந்தைகளுக்கு மிக எளிய முறையில், குறைந்த சொற்களைக்கொண்டு எழுதப் பெற்ற பிராணிகளின் கதை, கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளுக்குச் சுவை தராது. சம்பவங்கள் பாத்திரப் படைப்பு முதலியவற்றுடன் கூடிய வீரதீரக் கதைகளையே அவர்கள் விரும்புவர். அதேபோல்தான் பாட்டும். மிகச் சிறு குழந்தைகள் ஓசை நயமுடைய சிறு சிறு பாடல்களையே விரும்புவர். பெரிய குழந்தைகள் பொருள் நயம், வெளியிடும் திறமை முதலியவற்றில் சிறந்து விளங்கும் பாடல்களையே சுவைப்பர். ஆயினும், எப்பிரிவைச் சார்ந்த குழந்தையாக இருப்பினும் கதைப் பாடல்களை மிகவும் விரும்புகின்றனர். ஆனால், அத்தகைய பாடல்கள் நமது மொழிகளில் போதிய அளவு இல்லை என்றே கருதுகிறேன். குழந்தைகளுக்கு ஆடல் பாடல்களிலும், நாடகங்களிலும் அதிக ஆர்வம் உண்டு. நடிக்கத்தக்க நாடகங்கள் எத்தனை வந்தாலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும். எத்தனையோ பள்ளிகளும், குழந்தைச் சங்கங்களும் நாடகங்கள் வேண்டுமென அடிக்கடி கேட்கின்றனர்.

குழந்தை இலக்கியத்தில் அறிவியல் துறை மற்றொரு பிரிவாகும். விஞ்ஞானத்தைப் பற்றியும், தொழில் பற்றியும் ஏராளமான பாடப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆயினும், நாம் சொல்ல நினைப்பதை வேடிக்கையாகச் சொன்னால், குழந்தைகள் ஆசையோடு புதிய செய்திகளைத் தெரிந்துகொள்வர். அறிவியல் விஷயங்களை எளிதாகவும் வேடிக்கையாகவும் கூறினால் நல்ல பயன் விளையும். கதை மூலமாகவும், உரையாடல் மூலமாகவும் வெற்றியுடன் இதைச் செய்ய முடியும். கண்கவரும் வண்ணப் படங்கள், கேலிச் சித்திரங்கள் முதலியன மேலும் ஆர்வத்தை வளர்க்கும். அமெரிக்க எழுத்தாளராகிய மன்ரோ லீஃப் (Munro Leaf) தாம் எழுதி வெளியிட்டுள்ள வேடிக்கைப்

புத்தக வரிசையில் (Can Be Fun Series) இதை நிரூபித்துள்ளார்.

குழந்தைகளுக்கு எழுதுவோர் தங்களுடைய அறிவுத் திறமையையும், சொல் சாதுரியத்தையும் காட்டுவதுதான் முக்கியம் எனக் கருதக் கூடாது. இப்படிக் கூறுவது பற்றி, யாரும் தவருகக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். தாங்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றித் தெளிவாகவும், அழகாகவும் கூறவே முற்படவேண்டும். முதன் முதலில் சொற்களை அமைக்கும் முறைபற்றி நன்கு தெரிந்தவராகக் குழந்தை எழுத்தாளர் இருக்க வேண்டும். 'நான் எழுதி யிருப்பதில் கொஞ்சமாவது உயிர் இருக்கிறதா?' என்று தன்னைத் தானே அவர் கேட்டுக்கொள்ள வேண்டும். இச்சமயத்தில் உங்கள் முன் சில யோசனைகளை வெளியிட விரும்புகிறேன்:

1. நான் ஏற்கெனவே கூறியபடி, சாகாவரம் பெற்ற இலக்கியங்கள் பெரியோருக்கு மட்டுமன்றிக் குழந்தைகளுக்கும்-எந்த வயதில் அவர்கள் இருப்பினும்-நன்மை பயக்கின்றன. சிறந்த இலக்கியங்கள் மீண்டும் மீண்டும் குழந்தைகளுக்கு எற்ற வகையிலே சொல்லப்படுகின்றன. இப்படிக் கதை சொல்லும் நற்பழக்கத்தை நாம் தொடர்ந்து கடைப்பிடிப்பதோடு அக்கதைகளைப் புத்தக வடிவிலே கொண்டுவரவேண்டியதும் அவசியமாகும்.

2. இலக்கிய ஆர்வம் என்பது, பற்றிஞல் வருவதே யன்றிப் பயிற்சியினல் வருவதன்று. நல்ல இலக்கியத்தைப் படிக்க வேண்டுமென்ற ஆவலைக் குழந்தைகளிடையே வளர்க்கவேண்டும். தற்காலச் சிறந்த இலக்கியப் படைப்புக்களை, குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் சொல்வதன் மூலம் எழுத்தாளர்கள் இதற்கு உதவ முடியும். இத்தகைய முயற்சிகள் பாடப் புத்தக உலகில் செய்யப்படுகின்றன என்பது எனக்குத் தெரியும். ஆயினும், பாடப் புத்தகங்களைப் பெரும்பாலும் பரீட்சைகளை உத்தேசித்தே தயாரிக்கின்றுர்கள்; படிக்கின்றுர்கள். ஆகையால், குழந்தைகளால் அவற்றின் மூலம் இலக்கியச் சுவையை உணர முடிவதில்லை. நவீன எழுத்தாளர்களில் சிறந்தவர்களின் படைப்புக்களை – சுருக்கப் பதிப்பதிப்புக்களாகவாவது – குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திவைத்தால், அவர்களிடையே இலக்கியச் சுவையை அறிந்து மகிழும் பழக்கம் ஏற்படும்; இப்பழக்கம் அவர்கள் பெரியவர்களானதும் பேருதவியாயிருக்கும். அந்நூலாசிரியர்களுக்கு அதிகமான வாசகர்கள் உண்டாகவும் இது உதவுகிறது. இதற்கென ஆசிரியர்களையும் அவர்களது படைப்புக்களையும் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

3. மற்றொரு யோசனை. புகழ்பெற்ற எழுத்தாளர்கள், நேரம் கிடைக்கும்போது குழந்தைகளுக்கும் எழுத முயற்சி செய்யலாம். இதனல், குழந்தை இலக்கியம் வளம் பெறும். இப்படி நான் கூறுவதில் புதுமை எதுவும் இல்லை. டாட்ஜன் (லூயிஸ் கரால்), ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன், மார்க் ட்வைன், ஆண்டர்சன், கிப்ளிங், தாகூர், சுப்பிரமணிய பாரதி, ராஜாஜி போன்ற பெரிய எழுத்தாளர்கள் குழந்தைகளுக்காக இத்தகைய சேவை செய்துள்ளனர். இதனல், குழந்தை இலக்கியத்தின் மதிப்பு உயர்ந்திருப்பதோடு, அதன் வளமும் பெருகியுள்ளது.

4. நமது மொழிகளில் தயாராகும் பெரும்பாலான பாடப் புத்தகங்களில், இன்றைய எழுத்தாளர்களின் படைப்புக்களைக் காண்பது அபூர்வமாகவே உள்ளது என்று அடிக்கடி குறைகூறப்படுகிறது. இச்சமயம் அது பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் என்றே நினைக்கிறேன். பாடப் புத்தகத்திற்கு வசனம், கவிதை முதலியவற்றைத்

தேர்ந்தெடுப்பதில் பொருட்சிறப்பு எழுதும் முறை முதலியவற்றைக் காட்டிலும்,மொழி, இலக்கணம் முதலியவற்றிலே தற்போது அதிக கவனம் செலுத்தப் படுகிறது. இதனல், தங்கள் மொழியின் தற்கால இலக்கியப் போக்கை அறியாமலே மாணவருலகம் இருக்க நெரிடுகிறது. இது வருந்தத் தக்கதே,

5. இன்று, முக்கியமான இந்திய மொழிகளில் வளமான குழந்தை இலக்கியம் இருக்கின்றது என்பதை நான் அறிவேன். ஒரு மொழியிலுள்ள அந்த இலக்கியம் இந்தியாவிலுள்ள பல மொழிக் குழந்தைகளுக்கும் பயன்படுமாறு செய்யவேண்டும்.ஒரு மொழியிலுள்ள சிறந்த கதை, கட்டுரை, கவிதைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து வெளியிடவேண்டும். அத்தொகுப்பு நூல்கள் பிறமொழிகளிலும் பெயர்க்கப்பட வேண்டும். இப்படிச் செய்தால், ஒரு மொழியிலுள்ள சிறந்த எழுத்தாளர் பிறமொழிக் குழந்தைகளுக்கும் தெரிந்தவராகிருர். இதனல், அவர் புகழ் பெருகுவதோடு, அவரது வருமானமும் அதிகமாகிறது.

6. குழந்தைகளுக்குப் பொது அறிவுப் புத்தகங்களில் ஆர்வமூட்ட, எழுத்தாளர்கள் அந்தந்தத் துறையில் வல்லுநர்களுடன் கூட்டுச் சேர்ந்து எழுதலாம். இது பயனுள்ள ஒரு முயற்சி. இதுபோன்று ஓவியருடன் கூட்டுச்சேர்ந்து, மிகச் சிறு குழந்தைகளுக்கான நிறையப் படங்களுடன் கூடிய புத்தகங்களைத் தயாரிக்கலாம். இத்தகைய புத்தகங்களைத் திட்டமிட்டுப் பல மொழிகளிலும் தயாரித்தால் படங்கள், பிளாக்குகள் முதலியவற்றிற்காகும் செலவு குறைந்து, உற்பத்திச் செலவும் குறைகிறது. நாடு முழுமையும் பல மொழிகளில் உள்ள திறமை மிக்கோரின் சேவை குழந்தை உலகுக்குப் பயன்பட இம்முறை நன்கு உதவுகிறது.

7. என் அனுபவத்திலிருந்து இன்னொரு யோசனையையும் கூற விரும்புகிறேன். ஓர் எழுத்தாளர் தாம் எழுதப்போகும் பாட்டு அல்லது கதையை எழுதுவதற்கு முன்பு வாய்மொழியாகக் குழந்தைகளிடம்கூறினல் பயனுண்டு. குழந்தைகள் தமது படைப்புக்களை எப்படி வரவேற்கிருர்கள் என்பதை நேரில் அறிந்துகொள்ள இது வாய்ப்பளிக்கிறது. அத்துடன், குழந்தைகளின் தேவையையும், அக்கறையையும் மதிப்பிடவும் உதவுகிறது. என்னுடைய எழுத்தாள நண்பர்களும், நானும் இச் சோதனைகளைச் செய்து பயனடைந்துள்ளோம். குழந்தைச் சங்கங்களிலும், நூல் நிலையங்களிலுள்ள குழந்தைப் பகுதிகளிலும், எழுத்தாளர் சங்கங்களிலும் கதை சொல்லும் நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்.

8. குழந்தைப் பத்திரிகைகளைப் பற்றியும் இச்சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். யுனெஸ்கோ உதவியுடன், தென்மொழிப் புத்தக டிரஸ்ட் ஆதரவில் 'தமிழில் குழந்தைகள் படிக்கும் பழக்கம்' பற்றி நான் ஆராய்ச்சி நடத்தியபோது, குழந்தைகளுக்கு இன்னும் பல பத்திரிகைகள் வெளிவரவேண்டியதன் அவசியத்தையும், மிகச் சிறு குழந்தைகளுக்கென்று தனியாக ஒரு பத்திரிகை கூட இல்லாத குறையையும் உணர்ந்தேன். குழந்தை எழுத்தாளர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இன்றியமையாத கருவி குழந்தைப் பத்திரிகையே யாகும். இன்று புகழுடன் விளங்கும் பல எழுத்தாளர்கள் முதல் முதலாக எழுத்துலகில் இடம் பெற்றதே பத்திரிகைகள் மூலம்தானே! மேலும், திறமை மிக்க எழுத்தாளர்களைக் கண்டு பிடித்து உலகுக்கு அளிக்கும் திருப்பணியைச் செய்வதற்குப் பத்திரிகாசிரியர்கள் உதவுகிருர்களன்ரே! குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் பத்திரிகைகளைத் தராவிடில், அவர்கள் கண்டகண்ட பத்திரிகை

களைப் படிக்கும் பரிதாபகரமான நிலை ஏற்படுகிறது.

9. நவீன விஞ்ஞான, தொழில் முன்னேற்றங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் பல மாறுதல்களைச் செய்துள்ளன. ஆகையால், குழந்தைகள் புதிது புதிதாய்க் காண்பனவற்றைப் பற்றிக் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி அவர்களின் அறிவுப் பசியைப் போக்கவேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது. நமது மொழிகளில் அறிவியல் பற்றிப் பல நூல்கள் வெளி வந்திருந்த போதிலும், ஒவ்வொரு மொழியிலும் 'சிறுவர் கலைக் களஞ்சியம்' (Children's Encyclopaedia) அவசியம் தேவை. ஆர்தர் மீ (Arthur Mee) தொகுத்த சிறுவர் கலைக் களஞ்சியம் ஆங்கிலம் தெரிந்த குழந்தைகளின் பொது அறிவை எங்ஙனம் வளர்த்துள்ளது என்பதை நாம் அறிவோம். அதே போன்ற கலைக் களஞ்சியத்தை ஒவ்வொரு மொழியிலும் தயாரிக்க முயற்சி செய்யவேண்டும். இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள எழுத்தாளர்களின் திறமை முழுமையும் பயன்படுத்தி, ஒரே சமயத்தில் பல மொழிகளிலும் தயாரித்தால் சிக்கனமாகவும் விரைவாகவும் கொண்டுவர முடியும்.

10. இது சமயம், கடந்த பத்தாண்டுகளாக இயங்கிவரும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைப் பற்றி நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன். பொதுமக்களிடையே குழந்தை இலக்கியம் பற்றிய ஆர்வத்தை வளர்த்துத் தன்னால் இயன்றளவு நற்பணி புரிந்துள்ளது இச்சங்கம். புதிய எழுத்தாளரை உருவாக்கியதோடு, கவர்ச்சியான பல நல்ல புத்தகங்களைக் கொண்டுவரவும் உதவியிருக்கிறது. இது போன்று பிறமொழிகளிலும் குழந்தை எழுத்தாளர் சங்கங்கள் இருக்கின்றனவா என்பது எனக்குச் சரியாகத் தெரியாது. ஒருவேளை எழுத்தாளர் சங்கங்களே இத்தகைய பணிகளைச் செய்து வரலாம். இல்லையேல், பொதுவான எழுத்தாளர் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் குழந்தை இலக்கிய வளர்ச்சி குறித்துக் கருத்தைச் செலுத்த ஒரு தனிப் பகுதியை ஏற்படுத்தலாம்.

[மைசூர், கிருஷ்ணராஜசாகரில் அண்மையில் நடைபெற்ற எழுத்தாளர் முகாமில் படிக்கப் பெற்ற ஆங்கிலக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு.]

இலக்கியத்திலும் காலவண்ணம் (Fashion) இருக்கத்தான் செய்கின்றது; 'கோட்டு'களைக் கத்தரிப்பதிலும், தொப்பிகளைச் சாய்த்தணிவதிலும் இருக்கும் மனம்போன போக்கு உரை நடையிலும் கவிதையிலும் கூட முக்கியப் பங்கைப் பெற்றுள்ளது.

—டிசரேலி.

... ...

இன்று இலக்கியத்தில் பல நல்ல கொத்தனர்கள் இருக்கிறார்களே தவிர நல்ல சிற்பிகள் அரிதாகவே உள்ளனர்.

—ஜூபெர்ட்.

அச்சகத்தார் சங்கங்கள்

ஆர். வெங்கடேஸ்வரன்

அகில இந்திய மாஸ்டர் பிரிண்டெர்ஸ் ஃபெடரேஷனுடன் பல ஆண்டுகளாகத் தொடர்பு பெற்றுள்ள நான் இந்தியாவில் உள்ள அச்சகத்தார் சங்கங்களைப் பற்றி என் கருத்துக்களை வெளியிட முற்பட்டேன். சுமார் பத்தாண்டுகட்கு முன்னர் அகில இந்திய மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன் துவக்கப்பட்டது. அதன் நோக்கங்களில் சில:

1. அச்சுத் துறை பொதுமக்கட்குச் சிறந்த, மேலும் பயனுள்ள பணியைச் செய்ய உதவுதல்.

2. அச்சுத் துறையின் தேவைகளை நிறை செய்வதுடன் அதன் பல்வேறு பிரிவுகளையும் முன்னேற்றுதல்.

3. பொதுமக்கள், வாணிப நிலையங்கள், தொழிற் சங்கங்களுக்குச் சிறந்த அச்சுக் கலையின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.

4. பயிற்சித் திட்டங்கள், தொழில் நுணுக்கப் பள்ளிகள் முதலியவற்றின் வாயிலாக அச்சுத் துறையில் தொடர்பு கொண்டுள்ளோரின் தொழில் நுணுக்க அறிவைப் பெருக்குதல்.

5. சரியான கணக்கு முறைகள், ஒரே வகையான விலை நிர்ணயிப்பு, தொழில் முறையில் வளர்ச்சி முதலியவற்றிற்கு உதவுதல்.

6. இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் பணியாற்றும் இதுபோன்ற இயக்கங்களுடன் இணைதல் முதலியன.

மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன்களின் சர்வதேச பியூரோ, பிரிட்டானிய மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன், இந்தியன் ஸ்டாண்டர்ட்ஸ் இன்ஸ்டிட்யூஷன் முதலியவற்றுடன் இந்த ஃபெடரேஷன் இணைக்கப்பட்டுள்ளது. கல்கத்தா, அலஹாபாத், சென்னை, பம்பாய் ஆகிய நான்கு நகரங்களிலும் வட்டார அச்சுப் பள்ளிகள் அமைக்க இந்த ஃபெடரேஷன் காரணமாக இருந்தது. காகித விலை நிர்ணயம், காகிதம், இயந்திரங்கள் முதலியவற்றின் இறக்குமதிக்கு 'லைசென்ஸ்' வழங்குதல் முதலியவற்றில் உள்ள இடையூறுகளை அரசாங்கத்திடம் அவ்வப்பொழுது எடுத்துக் கூறி வந்துள்ளது. மற்றும், அச்சுக் கலையின் அண்மை வளர்ச்சிகளை நேரில் தெரிந்துகொள்ள அச்சகத்தார் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டு வந்தது. அண்மையில் நேஷனல் ப்ரொடக்டிவிடி கவுன்சில் அத்தகைய அச்சகத்தார் குழுவை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்று வருமாறு ஏற்பாடு செய்தது. ஆண்டுதோறும் அகில இந்திய அச்சகத்தார் மாநாட்டை நடத்தி வந்துள்ளது. இந்த மாநாட்டில் இந்தியாவின் தலை சிறந்த அச்சகத்தார் பலரும் ஒன்றுகூடிக் கலந்து பேசுவதுடன், உள்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், வெளிநாட்டிலும் முன்னேறி வரும் அச்சுக்கலை வளர்ச்சியைத் தெரிந்துகொள்ளவும் செய்கின்றனர். மாநாட்டின் ஒரு பகுதியாகக் கருத்தரங்கு

ஒன்றும் நடத்தப்படுகிறது. இதில் அச்சுத் தொழில் தொடர்புள்ள ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்றன. இந்த விவாதங்கள் அச்சகத்தார்க்குப் பெரிதும் பயன்படுவன. எனவே பலரும் இதில் பங்கேற்றுப் பயன் பெறுகின்றனர். மற்றும், பிரிட்டானிய மாஸ்டர் பிரிண்டர்ஸ் ஃபெடரேஷன் சார்பில் விலை நிர்ணயிப்புத் தேர்வுகளை (Costing Examinations) மாணவர்க்கென நடத்தி வருகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அச்சகத்தார் சங்கங்களை உருவாக்கி, ஃபெடரேஷனில் இணைப்பதுடன், அச்சகத்தார் குறைகளை அரசாங்கத்துக்கு அறிவித்து அக்குறைகளை நிறைசெய்வதற்குப் பாடுபட்டுள்ளது. ஏற்கனவே ஓர் அச்சகத்தார் சங்கம் தோன்றி ஃபெடரேஷனுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட இடத்தில் மற்றோர் அச்சகத்தார் சங்கத்தை இணைத்துக் கொள்வதற்கு ஃபெடரேஷனின் விதிகள் இடமளிக்கவில்லை. ஒவ்வொரு பகுதியிலும் அச்சகத்தாரிடையே ஒற்றுமையை வளர்ப்பதே இதன் அடிப்படைக் கருத்தாக இருக்க வேண்டும். இருப்பினும் இந்த அடிப்படைக் கருத்தைப் புரிந்துகொள்ளாமல் சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் உருவாகித் தம்மை இணைத்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றனர். எனவே, ஒரே இடத்திலிருந்தே ஒன்றுக்கு மேற்பட்ட சங்கத்தை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஃபெடரேஷனுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது கவனிக்கப்பட்டு வருகின்றது. பம்பாய், கல்கத்தா, சென்னை, டெல்லி, அலஹாபாத், பங்களூர், சிவகாசி, ஜபல்பூர், விஜயவாடா, ஹைதராபாத், கோயம்பத்தூர், ஆலப்புழை, எர்ணுகுளம், சேலம், திருச்சிராப்பள்ளி, வாரணாசி, நாகபுரி, மதுரை முதலிய நகரங்களின் அச்சகத்தார் சங்கங்கள் இந்த ஃபெடரேஷனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

அடுத்து நம் கவனத்துக்கு வருவன காகித சங்கங்கள் ஆகும். தேவையான அளவு காகிதமும், உயர் ரகக் காகிதமும் அச்சுத் துறைக்கு இன்றியமையாதன. ஆனால் அவை கிடைப்பதில் பல தொல்லைகள் உள்ளன. தீர்வைக் குழு (Tariff Commission) காகிதத்தின் விலையைக் கட்டுப்படுத்தியதற்குப் பிறகு, இந்திய காகிதத் தொழிற்சாலைகள் உயர் ரகக் காகிதத்தைத் தயாரிப்பதை நிறுத்திவிட்டன. இதனால், அச்சகத்தார் தம் தொழிலுக்குத் தேவைப்படும் உயர் ரகக் காகிதத்தையும், தேவைப்பட்ட அளவு சாதாரண காகிதத்தையும் பெற முடிவதில்லை. காகிதத் தொழிற்சாலைகள், காகிதச் சங்கங்கள் முதலியவற்றிற்கு ஃபெடரேஷன் இந்தத் தொல்லையை எடுத்து விளக்கி வருகின்றது. ஆனால் என்ன காரணத்தாலோ அவர்கள் செவி சாய்க்க மறுக்கின்றனர். இந்திய அச்சகத்தாரின் தொல்லைகளைத் தீர்க்க காகிதத் தொழிற்சாலைகளும், காகித விற்பனையாளரும் சிறிதேனும் முயற்சி எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும். காகிதத் தொழிற்சாலையினர், காகித விற்பனையாளர், அச்சகத்தார் ஃபெடரேஷன் உறுப்பினர் அடிக்கடி சந்தித்து இப் பிரச்சனைகளைக் குறித்து ஆலோசித்தால் விடிவு காலம் ஏற்படலாம்.

அடுத்து அச்சுத் துறையின் மற்றொரு அங்கத்தினரான பதிப்பாளரைக் கவனிப்போம். ஒரு வகையில் பதிப்பாளர் அச்சகத்தாரையும், காகித விற்பனையாளரையும் ஒதுக்கியே வைக்கின்றனர் என்று கூற வேண்டும். அச்சகத்தாரும் பதிப்பாளரும் ஒத்துழைத்தால் நல்ல பயன் விளையும். அச்சகத்தாரைப்பற்றிக் கவலைப் படாமல் பதிப்பகத்தார் அதிக இலாபம் பெறுவதையே நோக்கமாகக் கொள்கின்றனர்: மாறாக அச்சகத்தாருக்கு அச்சுக் கூலியில் சிறிதளவு சலுகை

அளித்தால் புத்தகங்களை உயர்ந்த முறையில் அச்சிட்டுத்தர வழியேற்படும். பதிப்பாளர் சங்கமும், அச்சகத்தார் சங்கமும் அடிக்கடி கூடித் தம்மைச் சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சனைகளை ஆராய்வதால் இரண்டு சாராருக்கும் பயன்கள் விளையும். பதிப்பாளரின் காலத்திட்டத்திற்கு அச்சகத்தார் கட்டுப்படவேண்டியுள்ளது. ஆனால் முன்னர் கண்டபடி காகித விற்பனையாளரிடமிருந்து தேவையான அளவோ, தேவையான நல்ல காகிதமோ கிடைக்காமற்போவதால் குறிப்பிட்ட காலத்திற்குள் அச்சகத்தார் தம் வேலையை முடிக்க இயலாமற் போகிறது இதனால் பதிப்பாளர் அச்சகத்தார் உறவு சிறிதளவு பாதிக்கப்படுகிறது. மாறாக, காகித விற்பனையாளரிட மிருந்து பதிப்பாளர் காகிதம் வாங்கித் தருவதில் காலதாமதம் ஆகும்பொழுது, கோத்த அச்சுக்களைப் பயன்படுத்த முடியாமல் அச்சகத்தில் அப்படியே வைக்கவேண்டியுள்ளது.

இந்தியத் தொழிற்சாலைகள் அச்சகத்தார்க்குக் குறிப்பிட்ட காலவரையறைகளில் தேவையான காகிதம் தருவதில் பலமுறை தவறியுள்ளன. அவை அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தற்பொழுது இக்காலதாமதம் குறைந்து வருவதாகத் தெரிகிறது.

இந்தத் துறையிலுள்ள மற்றொரு பிரச்சனை 'பிளாக்' தயாரித்தலாகும். இத்துறையில் நூலாசிரியர், ஓவியர், 'பிளாக்' தயாரிப்பாளர் ஆகிய மூவரும் ஒத்துழைக்க வேண்டும். முதலில் நூலாசிரியர் தம் எண்ணத்தை ஓவியருக்குப் புரியவைக்க வேண்டும்; ஓவியர் அதிலிருந்து கவர்ச்சியான ஓவியத்தைத் தெளிவாக வரைய வேண்டும். அப்பொழுதுதான் ஓவியரின் கருத்தை 'பிளாக்' தயாரிப்பவர் நிறைவேற்ற முடியும். ஆனால் விஞ்ஞான–தொழில் நுணுக்க நூல்களில் இருப்பதைப்போல இந்தக் குறை கதை நூல்களில் இருக்கவில்லை. மேலை நாடுகளை ஒப்பிடும்பொழுது நாம் இந்த நாட்டில் ஆமை வேகத்தில்தான் விஞ்ஞான நூல்களைத் தயாரித்து வருகிறோம்.

இந்தத் துறைக்குத் தேவையான ஒழுக்கக் கோட்பாடு (Code of Ethics) ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், இந்தியாவிலுள்ள அச்சுத் துறையின் பல்வேறு அங்கங்களின் மாநாடு ஒன்றில்தான் இது சாத்தியமாகும். ஒரு தனிப்பட்ட மனிதர் அல்லது சங்கத்தால் மட்டும் இயலாது. ஒழுக்கக் கோட்பாடு ஒன்றை நான் வெளியிடத் தயங்கினாலும், இந்தத் துறையின் பல்வேறு அங்கங்களான, காகிதத் தொழிற்சாலையினர், காகித விற்பனையாளர் ஃபெடரேஷன், அச்சகத்தார் ஃபெடரேஷன், பதிப்பாளர் சங்கம், 'பிளாக்' தயாரிப்பாளர், ஓவியர் ஆகியோரிடையே ஒரு வகையான ஒப்பந்தம் அல்லது ஒத்துழைப்பு நல்ல முறையில் உருவானால் அது எல்லா அங்கங்களின் வளர்ச்சிக்கும் பயன்படும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

———

வெளிநாடுகளில் இராமாயணம்

நெடியம் இராகவன்

இந்தியன் ஒருவன் வெளிநாடுகளில் பிரயாணம் செய்யும் நேரத்தில் அயோத்திய அரசனை இராமபிரானின் வரலாறு எவ்வாறு அங்கெல்லாம் பரவியுள்ளது என்று அறியும்பொழுது ஒரு புத்துணர்ச்சி தோன்றத்தான் செய்யும். இராமர் இந்தியாவிலும் இலங்கை வரையிலும் பிரயாணம் செய்தார். ஆனால் அவர் கதையோ கடல் கடந்து பல்வேறு நாடுகளிலும் பரவியுள்ளது இராமாயணம் பரவிய முறையை அறியும் பொழுது இந்தியக் கதைகள், இந்திய வரலாறு, இந்திய அனுபவங்கள், இந்தியக் கோட்பாடுகள், இந்தியப் பண்பாடு முதலியன எவ்வாறு வெளிநாடுகளில் பரவியுள்ளன என்று தெரிந்து மகிழ்ச்சி அடைவோம்.

இடத்துக்கு இடம் கதை வேறுபடுகிறது. இந்தியாவிலேயே வால்மீகி, கம்பன், துளசிதாஸ், துஞ்சத் எழுத்தச்சன் முதலியோரின் பல்வேறு இராமாயணங்களிடையே சில வேறுபாடுகளிருக்கக் காணலாம். இருப்பினும் பல்வேறு மொழிகளில் அமைந்துள்ள இந்த இராமாயணங்கள் அனைத்தும் இராமர், சீதை, இலக்குவன், அனுமன் ஆகியோரின் அருமை பெருமைகளை விளக்குவதுடன், இந்துக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கடைப் பிடிக்கும் தர்மநெறி, சரியான ஒழுக்க முறை, சிறந்த வாழ்க்கை விதிகள் முதலியவற்றை வலியுறுத்துகின்றன. மொழிபெயர்ப்பு இடைச் செருகல், பிற்சேர்க்கை போன்ற பலவற்றாலும் மூலக் கதைப் போக்கு பாதிக்கப்படவில்லை. வெளிநாடுகளிலும் இராமாயணங்களில் வேறுபாடுகள்—புற வேறுபாடுகள், காட்சி அளிக்கின்றன. ஆனால், தன்மானம், பெருந்தன்மை, தைரியம், வீரம், பெற்றோர் சொற் கீழ்ப்படிதல், தாய்ப் பாசம், அன்பு, தாய்மை, உண்மை முதலியவற்றை இலட்சிய நிலைக்கு உயர்த்துதலும், தீமையை நன்மையும், அதர்மத்தைத் தர்மமும் எப்படியும் வெல்லும் என்பதை மெய்ப்பித்தலுமாகிய கொள்கைகள் அனைத்திலும் பொதுப்படையாக உள்ளன.

அரசர் முதல் ஆண்டிவரை அனைவரையும் பல நூற்றாண்டுகளாக, இராமாயணத்தில் காணப்படும் இந்த உயரிய பண்புகள் கவர்ந்ததுடன், அவர்கள் வாழ்க்கை முறைக்கும் வழிகாட்டியாய் விளங்கின.

இந்தியாவில் இராமாயணக் கதை வால்மீகிக்கும் முற்பட்டே இருந்திருக்க வேண்டும். யாரிடமோ கேட்டோம் என்று சொல்வதைவிட நேரில் கண்டோம் என்று சொல்வதில் சற்று நம்பிக்கை ஏற்படுமாதலால் வால்மீகி தாம் இராமர் காலத்தவரென்று சொல்லிக்கொள்கிறார்போலும். இருப்பினும் அவர் கூற்றுப்படியே, இராமர் கதையின் சில பகுதிகளை நாரதர் அவருக்குக் கூறினாராம். எனவே நாரதருக்கும் அக்கதை முன்னரே தெரிந்திருக்கவேண்டும். பிரம்மாவே வால்மீகி முன்னர்த் தோன்றி, "இராமர், இலக்குவன், ஜானகி ஆகியோரின் வரலாற்றில் இன்னமும் நினைவிலுள்ள பகுதியை" எழுதும்படிக் கூறினார். மேலும் "இராமாயணம் மக்களிடையே பரவி, மலைகளும், கடல்களும் நிலைபெற்றிருக்கும் வரை

அழியாதிருக்கும்'' என்றும் கூறினாராம். அவர் ஜோதிடம் வீண்போகவில்லை.

சில ஆண்டுகட்கு முன்னர், அப்பொழுது மேற்கு வங்காளத்தின் கவர்னராக இருந்த டாக்டர் ஏ. சி. முகர்ஜி, பானுபக்த ஆச்சாரியர் இயற்றிய நேபாள இராமாயணத்தை இந்தியாவில் பதிப்பித்தார். பானுபக்தரின் இராமாயணம் அண்மைக் காலத்ததுதான். ஆனால் இராமர் கதையோ இந்தியாவைப் போலவே நேபாளத்திலும் காலாகாலமாக வழங்கிவந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக நட்பு நாடாகவும், கூட்டுறவுபெற்ற அண்டை நாடாகவும் உள்ள நேபாளத்தில் இராமாயணம் வழங்கி வருவதில் வியப்பில்லை. ஆனால் இராமகாதையின் பிரயாணம் அத்துடன் நிற்கவில்லை. பல காலத்திற்கு முன்னரே அது மலை கடந்து திபேத்திற்குப் பரவியது. திபேத்திய இராமாயணத்தின் இந்திய அல்லது ஆங்கில மொழி பெயர்ப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனினும் இந்த நூற்றாண்டின் துவக்க காலத்தில் பேராசிரியர் வாஸ்ஸிலிஃப் (Wassilief) குறித்ததுபோல திபேத்திய மொழியில் இராமாயணம் வாழ்ந்து வருகிறது என்பது என்னவோ உண்மைதான்.

புத்தமத நாடுகளில் இராமகாதை புத்த ஜாதகக் கதை உருவில் பெரும்பாலும் பரவியது. ஆனால், தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா முதலிய நாடுகளில் அப்படியில்லை. ஜாவாவின் கிராமப்புறங்களில், மகாபாரதத்தைப் போலவே இராமாயணமும் திறந்த வெளி அரங்குகளில் இன்றும் நடிக்கப்படுகின்றது. இந்தியாவைப் போலவே அங்கும் இளைஞரும் முதியோரும் அந்த நாடகங்களில் நகைச்சுவைக் கட்டங்கள் வரும்பொழுது வயிறு குலுங்கச் சிரித்தும், சோகக் கட்டங்கள் வரும்பொழுது கண்ணீர் உகுத்தும் அனுபவிக்கின்றனர்.

மலேயா மொழியில் இராமாயணம் பிற்காலத்தில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இருப்பினும் டாக்டர் ரிச்சர்ட் வின்ஸ்டெட் (Richard Winstedt) குறிப்பிட்டது போல 'மலேயாவில் இந்து சகாப்தம்' துவங்கிய காலத்திலிருந்து (சுமார் ஆயிரம் ஆண்டுகள்) வெளிப்படையாகவும், அல்லாமல் புறத்தில் தெரியாத வகையிலும் மலேயாப் பண்பாட்டில் இராமாயணம் இடம் பெற்றுள்ளது. மலேயா மொழிபெயர்ப்பு சமஸ்கிருதத்தி லிருந்தல்லாமல் தமிழிலிருந்து செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தாய்நாட்டில் இடம் பெற்றுள்ள 'ராம் கீர்த்தி' (சையாமில் ராமகியன்) இராமாயணம் தமிழ் வாயிலாகப் பரவிய முறையை ஐயமில்லாத வகையில் தெளியவைக்கிறது. ஆரும் இராமன் அரசாட்சி வரையில் ராமகியன், இந்திய இராமாயணத்திலிருந்து வந்தது என்பது பல தாய்மக்களுக்குத் தெரியாது. தாய்நாட்டு மரபுவழக்கிலும் புராதனச் சொத்திலும் இராமாயணம் அந்த அளவு இரண்டறக் கலந்துவிட்டது. தாய் நாட்டுக் கலையிலும், இலக்கியத்திலும் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே இராமாயணம் குடிபுகுந்துவிட்டது என்பது தெளிவு. வெகு காலத்திற்கு முன்னரே, நாடகக் கூறுள்ள பொம்மலாட்டம், 'ஹ்நாங்ஸ்' (Hnangs) என்ற பெயர்பெற்ற நிழல் நாடகங்கள் முதலியவற்றில் இராமாயணக் கதை நிகழ்ச்சிகளில் சில இடம் பெற்றன. பிற்காலத்தில், முகமூடி நாடகங்களிலும் அவை இடம் பெற்றன. அயூத்யா (அயோத்யா) சகாப்தத்தில் கி. பி. 1349–1647) முகமூடி நாடக இலக்கியம் தோன்றியது. கதகளியைப் போன்ற முகமூடி நாடகங்களில் இராமாயணத்தின் சில நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பிற்காலத்தில் இரண்டாம் இராமர் காலத்தில்தான் இராமாயணம் தொடர்ச்சியான நாடகமாக உருவாக்கப்பட்டது.

இன்றைய தாய் அரச பரம்பரையைத் தோற்றுவித்த முதல் இராமரே ராமகீர்த்தியைப் பாடிய முதல் கவி என்பது முதன் முதலில் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சுவாமி சத்யானந்த பூரி அவர்களின் கூற்ருகும்.

இரண்டாம் இராமர் (1809–1824) முகமூடி நாடகத்திற் கேற்ப அதை நாடகமாக உருவாக்கினர். ஆரும் இராமர் அதை நன்கு விளக்கி இந்தியத் தொடர்பையும் எடுத்துக் கூறினர்.

முதலாம் இராமர் காலத்தைச் சேர்ந்த, பாங்காக்கில் உள்ள மரகத (Emerald) புத்தர் கோவிலுக்குச் சென்றவர்கள் அக் கோவிலின் சுற்றுப் பிராகாரத்தில் வரையப்பட்டுள்ள 200 இராமாயணக் காட்சிகளைக் கண்டிருப்பர். இத்துறையை நன்கு ஆராய்ந்த சுவாமி சத்யானந்தர் கூறியபடி கோவிற் சுவரோவியங்களில் மட்டுமன்றித் தாய்நாட்டு நுண்கலைகள் யாவும் இராமாயணத்தை மையமாகக் கொண்டு வளர்ந்திருக்கக் காணலாம்.

நாரதர் வால்மீகி உரையாடலில் ராமகியன் துவங்கவில்லை. நாராயணுவின் பத்தாவது அவதாரத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. பன்றி, ஆமை, மீன், எருமை, முனிவர், மனித–சிங்கம், கூனன், கிருஷ்ணர், தேவகன்னி முறையே முதல் ஒன்பது அவதாரங்களாகும். பல கட்டங்களில் இராமாயணத்திலிருந்து ராமகியன் வேறுபடுகிறது. ஆனல் அடிப்படைக் கதை ஒன்றுதான். இராவணன் (தசகண்டட) இறக்க, வீடணன் (பிவேக்) இலங்கை சிம்மாதனத்தில் அமர்த்தப்படுவதுடன் ஒரு பகுதி முடிந்து; பின்னர், சீதை காட்டுக்கு அனுப்பப்படுதல், லவகுசர் பிறத்தல், அசுவமேத யாகம், சீதை நிலத்துக்குள் மறைதல் இப்படியாகத் தொடர்ந்து — இறுதியாக அன்புருவமான தாய்மக்களின் மனம் அமைதி யடைவதற்கென, இராமர் சீதை ஒன்றுபடுவது ராமகியனின் இறுதிக் கட்டம். "பிறகு சோகம் தன் பிடியைத் தளர்த்திற்று, மீண்டும் எல்லையற்ற மகிழ்ச்சியில் இராமர் திளைக்கலானர்."

ராமகியன் இராமாயணத்திலிருந்து கதை அமைப்பில் வேறுபடுகிறது என்ருல், சீனர்களால் உருவாக்கப்பட்ட 'சீன ராமாயணம்' பெரிதும் வேறுபட்டதாகும். அங்கு இராமாயணத்தை–அதுபோன்ற ஒன்றை. சிறுகதை வடிவில் காணலாம். நாகபுரியில் உள்ள 'இந்தியப்பண்பாட்டு சர்வதேச அகாதெமி'யைச் சார்ந்த டாக்டர் ரகுவீரா 'சீன ராமாயணம்' என்ற தலைப்பில் இரண்டு கதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றில் 'பெயர் தெரியாத அரசனின் ஜாதகம்' என்ற தலைப்பில் உள்ள முதல் கதை, கி. பி. 251 ல் 'ஓர் இந்திய மூலத்தி'லிருந்து காங்செங்–ஹுய் (Kang Seng - Hui) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறு நூலும், 'பத்து ஆசை அரசனின் நிடானு' (Nidana of King Ten-Luxuries) என்ற தலைப்பிலுள்ள, 'கேகயனியற்றிய ஓர் இந்திய மூலத்தி' லிருந்து கி. பி. 472 ல் மொழிபெயர்க்கப்பட்டது என்று குறிக்கப்பட்ட நூலும் பாலி மொழி 'தசரத ஜாதக'த்துடன் (தசரதா என்பது பத்து ஆசைகள் என்று தவருக மொழிபெயர்க்கப்பட்டது என்று கொண்டாலும்) ஒரு சிறிதும் ஒற்றுமை பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'பெயர் தெரியாத அரசனின் ஜாதக'த்தில், தன் சிற்றப்பனல் சிம்மாதனத்தை இழந்த ஓர் அரசன் நாட்டில் இரத்தச் சேதத்தைத் தடுப்பதற்கென தன் மனைவியுடன் காட்டுக்குப் போய்விடுகிருன். அங்கு, முனிவர் வேடத்தில் வந்த நாக அரசன் ஒருவன் அரசியைத் திருடிச் சென்றுவிடுகிருன். ஜடாயு இராவணப் போர் இங்கு வேறு வடிவத்தில் குறிக்கப்படுகிறது.

பெரிய பறவையொன்று நாக அரசனுடன் போரிடுகிறது. (சுக்ரீவன்) குரங்கரசனின் நட்பைப் பெறுதல் அரசியைத் தேடுதல், குரங்குச் சேனையுடன் நாக அரசனின் ராஜ்யமான தீவிற்குப் பாலம் கட்டப்படுதல், பயங்கரமான போர்கள், நாக விஷத்தால் மயக்கமுற்ற போர் வீரர்களை எழுப்புவதற்கு 'ம்ருத சஞ்சீவினி'யை ஒரு சிறு குரங்கு கொண்டு வருதல், நாக அரசன் கொல்லப்படுதல். களவுபோன அரசி மீட்கப்படுதல், அரசன் தன் ராஜ்யத்திற்குத் திரும்புதல், அரசிக் கிடப்படும் சோதனை, முடிவில் தர்மம் நிலை நாட்டப்படுதல் ஆகிய அனைத்தும் சற்றே வேறுபட்ட தலைப்புகளிலும் பெயர்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. மற்றும் தான்தான் முற்பிறவியில் அந்த அரசனாக இருந்ததாகவும், தேவதத்தனே அந்தக் கொடூர சிற்றப்பனாக இருந்தானென்றும் புத்தர் அந்த ஜாதகத்தை முடித்தாராம்.

'பத்தாசை அரசனின் நிடானு' மற்றுமொரு கதையாகும். அந்த அரசன் ஜம்புத்வீபத்தில் அரசாண்டு வந்தான். அவனுடைய முதல் மனைவி, ரா–மா என்பவனைப் பெற்றெடுத்தாள். அவன்'சென்''ரா' (Sen and Ra) ஆகிய பண்புகளைக்கொண்ட நா–ரா–யென் (Na-Ra-Yen)னினுடைய ஆற்றலைப் பெற்றிருந்தான். இரண்டாவது மனைவியின் மகன் ரா–மன் (Ra-Man). ப–ர–தா (Ba-Ra-Da) மூன்றாவது மனைவியின் மகன். அவளுக்கு அரசன் ஒரு வரம் கொடுத்திருந்தான். மேற்கொண்டு, கைகேயி தன் வரத்தைப் பெற பிடிவாதம் பிடிப்பதும், ரா–மாவும், ரா–மனும் (இலக்குவன்) காட்டுக்குத் துரத்தப் படுவதும், ப–ர–தா பின் தொடர்ந்து ரா–மாவைத் திரும்பி வருமாறு வேண்டுதலும், அவன் மறுத்தலும், தன் தமையன் பெயரில் அவன் பாதுகைகளைக் கொண்டு ப–ர–தா ஆட்சிபுரிதலும், இறுதியில் தன் மாண்ட தந்தையின் கட்டளையின்படி நாடு கடந்து இருக்கவேண்டிய காலம் முடிந்த பிறகு ரா–மா மீண்டு வருதலும் குறிக்கப்பட்டுள்ளன. சீதை, இராவணன் அனுமன் முதலியவர்களைப்பற்றிய குறிப்பு ஒன்றுமில்லை தான். ஆனால் இது, தர்மம், நன்னடத்தை, பெற்றோரிடம் பக்தி, உண்மையுடன் நடத்தல் முதலியவற்றை விளக்கும் கதையாகும். முன்னோரை வழிபடுவதை மேற்கொண்டும், பலதார மணம் புரிந்தும் வந்த அக்காலச் சீனர்கள் 'ஒரே பத்தினி விரத'த்தைப் பற்றியோ, இராவணன், மற்ற அரக்கர்கள் வடிவத்தில் தீமை அழித்தொழிக்கப்படுவதைப்பற்றியோ கவலைப்படவில்லை. ஆனால் அவர்களுடைய சமூக அமைப்பின் அடிப்படைத் தேவையான 'பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல்' என்னும் விதியை அவர்கள் மிகவும் போற்றினர்.

"பெற்றோரிடம் கொண்ட ஒழுக்கத்தாலும் நேர்மையாலும் காற்றும் மழையும் உரிய பருவ காலங்களில் வந்தன. ஐவகைத் தானியங்கள் பெருவாரியாக விளைந்தன. மக்களை எந்த நோயும் பீடிக்கவில்லை. எம்–பு–தெய் (ஜம்புத்வீபம்) நாட்டில் மக்கள் வளம்பெற்று முன்னினும் பத்து மடங்கு செல்வந்தராயினர்" என்று பொதுவான சீன மரபுப்படி கதை முடிகின்றது.

முடிவிலே ஆரம்பம்

ஸ்ரீ காந்தா

நாற்பத்தைந்து வருஷ வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தபொழுது, அவன் கண்ணில் பட்டது என்ன ?

படுக்கை என்று பேரளவில் சொல்லக் கூடிய கந்தைகளின் மேல் அவனுடைய ஆறு குழந்தைகளும் படுத்துக்கொண்டிருந்தன; (பெரியவளுக்குப் பதினாறு வயதானாலும் அவனுடைய மனத்திற்கு அவள் குழந்தைதானே ?) அவர்களுடைய கண்களில் தூக்கப் பொலிவு, மெய்மறந்த உறக்கம். சுவரில் சிம்னி விளக்கு மினுக் மினுக் கென்று, எண்ணெய் குறைந்துவிட்டதால் மங்கிக்கொண்டே எரிந்துகொண்டிருந்தது.

இவர்களெல்லாம் தன்னிடமிருந்து வந்தவர்கள் தானே? இவர்களின் இன்றைய நிலைக்குக் காரண புருஷன் தான் தான் அல்லவா ? (ஆனால் ஒரு காலத்தில் இவர்கள் இருக்கவில்லை.)

ஐந்தேகாலடி உயரமுள்ள அவனுடைய உடலில் அந்தச் சிறிய இதயம் மகிழ்ச்சியால் பூரித்தது. பெருமை அவன் உடல் முழுவதும் பரவியது.

அவன் குச்சிபோன்ற கைகள் சட்டைக்குள் போய், (அந்தச் சட்டை எட்டு நாளைக்கு முன்னே துவைத்தது, வேர்வை நாற்றத்துடன் கூடி இருந்தது.) அவன் கை விரல்கள் உள்ளே கிடந்த எலும்புக்கூட்டின் எலும்புகளை எண்ணின. (அந்தக் கூடு அநேக வருஷங்களாக ஆஸ்த்மாவைத் தாங்கி வந்திருக்கிறது.)

மற்றொரு தடவை...

ஐந்தேகாலடி உயரமும், எலும்புக்கூடும். குச்சிக் கைகளும் உடைய இரண்டாம் ரக குமாஸ்தாவான இந்தச் சரீரம் ஆறு குழந்தைகளின் பிறப்புக்குக் காரணமாக இருந்தது !

இந்த அடிப்படை உண்மையை உணரும்பொழுது அவன் படுக்கையிலிருந்து எழுந்து ஹாலில் நடந்துகொண்டிருந்தான். (நாற்பத்தைந்து வருஷமான அவனுடைய கடிகாரம் வழி தவறி அடித்துக் கொள்ளத் தொடங்கியது !)

எதிரில் சமையலறை! நூற்றாண்டு விழாக் கொண்டாடியதுபோன்ற அழுக்கும் துருவும் பிடித்திருந்த பழைய டப்பாக்கள் ! (அவைகளில் முக்கால் பாகத்துக்குக் காற்றுத்தான் நிறைந்திருந்தது.) கொடியில் உலர்த்தியிருந்த பழைய இரண்டு மடிப் புடவைகள்; அன்று இரவு, குழந்தைகள் சாப்பிட்டுப் போட்டிருந்த பாத்திரங்கள்.

நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு ஜோடி இளம் கண்கள் உலகையே மிகுந்த ஆசையாகப் பார்த்தன. இன்று அந்தக் கண்கள் எங்கே? (அவனுடைய சிந்தனை நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னே தாண்டியது.)

ஏதோ ஒரு சமயம் வாங்கியிருந்தான். என்ன நிறம் என்று சொல்லமுடியாத, ஒடுங்கி நசுங்கிப்போன டிரங்கு; (அதற்குள் இரண்டு பழைய பொம்மைகள், கல்யாணத்தில் அவர்களுக்குக் கொடுத்த பொம்மைகள்; மணிச் சரம்; முதல் குழந்தை பிறந்த பொழுது வாங்கிய உல்லன் தொப்பி; அவனுடைய மனைவியின் நைந்து மக்கிப்போன கும்பகோணப் புடவை!) அந்தப் பெட்டியின் பக்கத்தில் மூலையில் நின்றுகொண்டிருந்த

கிழிந்த குடை; (வெயிலில் அதைப் பிடித்துக்கொண்டு சென்ருல், அதன் வழியே நூறு சூரியனைத் தரிசிக்கலாம்;) எப்பொழுதோ கல்யாணம் நடந்தது என்பதற்குச் சாட்சிபோல உல்லன் கோட்டு, கோட்டு ஸ்டாண்டில் தொங்கிக்கொண்டிருந்தது.

மாமனர் கொடுத்தது அது; அதை ஆசை காட்டி அவர், மென்மையான பெண்ணின் கரத்தையும் அவனிடம் ஒப்பித்து விட்டார்.

(அந்தக் கோட்டைப் போட்டுக்கொண்டு அவளுடைய கை பிடித்ததுதான் மிச்சம். அந்த மாதிரியே மற்ருென்று தைத்துக் கொள்ளும் யோகம் அவன் தலையில் எழுதவில்லை!)

அந்த மென்மையான கைகளைப் பிடித்ததற்கு.. ...பரிசாகப் படுத்திருந்த ஆறு......

அந்த ஹாலின் இரண்டு சுவர்களுக்கிடையே உள்ள தூரம் இரண்டுவானத்திற்கு இடையே உள்ள தூரத்தைப்போலிருந்தது; அவன் நின்றுகொண்டிருக்கும் தரையே தலை கீழாகிவிட்டது போலிருந்தது; அவன், அவனுடைய வாழ்க்கை, குடும்பம், அனைத்தும் இராட்டினத்தில் சுற்றி வருவதுபோல் தோன்றியது—

மாமனர் கொடுத்த மற்ருென்று...

அங்கேயே அந்தக் கூடத்தைச் சேர்ந்த அறையில் மூடின கதவுகளின் ஜன்னல் கம்பிக்குப் பின்னல் பரட்டைத் தலையுடன், அலைந்து கலைந்த துணியுடன், தன்னையே விழுங்கும் பார்வையுடன் அவள் பார்க்கும் போது—

தன் மாமனரின் நினைவு மீண்டும் தாக்கியது. "பைத்தியத்தை என் கழுத்தில் கட்டிய பாவி. சண்டாளன்!"

(கல்யாணமானபோது அவள் நன்ருக இருக்கவில்லையா? பைத்தியம் என்று கருதிய பிறகும் மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றனவே!)

"எல்லோரும் பாவிகள், சண்டாளர்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்தும் எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பது மிகுந்த ஆச்சரியம்."

அவனையே பார்த்துக்கொண்டிருந்த 'பைத்தியத்'தின் கண்களில் மென்மை தோன்றி, கண் கசிந்து ஒரு துளிக் கண்ணீர் சிந்திக் கன்னத்தில் வழிந்தது. பின்னர் பாதித் திறந்த உதடுகளுக்கும் தப்பித்துக்கொண்டு உருண்டோடியது. அப்போது—

"என்னையே பார்த்துச் சிரிக்கிருள் பாவி... இவள் என் தலைமீது உட்கார்ந்திருக்காவிட்டால் நான் வாழ முடியாமற் போயிருப்பேன? என் வழியில் இவள் கால்வைத்ததனுல்தான், எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எல்லாம் பாழ்! எவ்வளவு குழந்தைகள்!" பாதித் திறந்த உதடுகள் நன்ருகத் திறந்தன, மலர்ச் சிரிப்பில் இடி ஒலி கேட்டது.

அந்தப் 'பைத்தியம்' சிரித்தாள்; வெறி பிடித்தாற்போலச் சிரித்தாள்; வயிறு வெடிக்கச் சிரித்தாள்; அவள் உள்ளே இருந்த பெண் சிரித்தாள்; பெண்ணின் இதயம் கெக்கலித்துச் சிரித்தது. அந்தச் சிரிப்பின் ஒலி, ஜன்னல் கம்பிகளைத் துளைத்து நேராக அவன் நெஞ்சில் இடித்தன.

"சிரிக்கிருயா, நன்ருகச் சிரி, சண்டாளி; என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிருய் அல்லவா? என் எலும்பு நெஞ்சைப் பார்த்துச் சிரி; குச்சிபோல இருக்கும் உடலைப் பார்த்துச் சிரி," எப்படியானுலும் விதையைப் போலத்தானே மரம்! அப்பனுக்குச் சரியான பெண்!

அந்த அப்பனுக்கும் இவளுக்கும் எவ்வளவு பிரியம்! 'அப்பாவைப் பார்க்கவேண்டும், அப்பாவைப் பார்க்கவேண்டும்' என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டே இருப்பாள்!

கலியாணமானதிலிருந்து ஒரே மாதிரியான பிடிவாதம். ஒரு தடவையாவது அவளுடைய தகப்பனுரைப் பார்க்க அனுப்பவில்லை. ஆமாம், அனுப்பியதே கிடையாது.

"பெண்ணின் பேச்சை உடனுக்குடன் நான் கேட்டு விடுவேனே? ஒருக்காலும் மாட்டேன்.

"ஒரு நாள், அவளுடைய தகப்பனுருக்கு உடம்பு சரியாக இல்லை என்று கடிதம் வந்தது; அதைக் காட்டினுல் ஊருக்குப் போகிறேன் என்று தகராறு செய்வாளோ என்று அந்தக் கடிதத்தை ஒளித்து வைத்துவிட்டேன்; மறுநாள் அவளுடைய தகப்பன் காலமாகிவிட்டான் என்னும் கடிதம் வந்தது. எப்படியோ மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, அதையும் ஒளித்து வைத்துவிட்டேன்; (ஆண் பிள்ளைக்கு அத்தனை அதிகாரம் வேண்டாமா?)

"எத்தனையோ நாள் ஆனபிறகு, அந்தக் கடிதங்கள் யாவும் அவள் கைக்குச் சிக்க வேண்டுமா? அன்றிலிருந்து ஆரம்பமாகிவிட்டது, அவளுக்கு என் மேல் வெறுப்பு. சதா என்னையே வெறித்து வெறித்துப் பார்ப்பாள்; கோரமான சிரிப்பு...பாவி..."

தரையின்மீது போடப்பட்ட பிணம்போல இருந்த அவன் படுக்கை, தன் வீரனைத் தன்னை நோக்கி அழைத்தது, அவனுடைய சோர்ந்த உடலும் கொதிக்கும் மனதும் ஒன்றுடன் ஒன்று போராடிக்கொண்டே படுக்கையில் சென்று விழுந்தன.

(மூன்ருவது குழந்தை பிறந்தபொழுது தான், அவள் பைத்தியமானுள். அன்றிலிருந்து ஆருவது குழந்தை பிறக்கும் வரையில் அவளுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டியதெல்லாம் அவனே செய்துவந்தான். குறித்த வேளைக்கு, அவர்களின் சாப்பாடு, சிற்றுண்டி, துணி எல்லா விஷயங்களையும் அவன் கவனித்துக் கொண்டிருந்தான். 'நான் ஆண்பிள்ளை' என்று மிடுக்குடன் இருந்தவன், சாதாரணப் பெண்களைப்போல் பத்து தேய்த்து, உடம்புத் துணியெல்லாம் கரி பண்ணிக்கொண்டு, காலையிலும் மாலையிலும் செக்கு மாடுபோல உழைத்து, அவர்களின் வயிற்றை நிரப்பி—)

பாழாய்ப் போன வாழ்க்கை—நாசமாய்ப் போன குழந்தைகள், பைத்தியக்கார மனைவி இந்தச் சௌபாக்கியம் இல்லை என்று யார் அழுதார்கள்? பைத்தியமான பிறகும் இவளுக்குக் குழந்தை பிறப்பது நிற்கவில்லையே! (இவைகளுக்கு எல்லாம் தான்தான் காரணம் என்றும் ஒரு சமயம் சொல்லிக்கொண்டான்.)—

அவனுடைய முகத்தில் தண்ணீர் இறைத்ததுபோல் சிலிர்ப்பு ஏற்பட்டது—அவனுடைய நினைவு வண்டித் தொடர் நின்றது. எங்கிருந்து இந்தத் தண்ணீர் வந்தது என்று இடது கையால் துடைத்துக்கொள்ளும்போது—

அங்கேயே அருகில் படுத்திருந்த அவனுடைய ஆருவது குழந்தை—மூன்று வருஷத்துப் பாலகன்—அவன் தொடைகளினிடையே ஒரு சிறு ஊற்று பெருக்கெடுத்ததைப் பார்த்தான்—

"சீ...து!" என்று ஆரம்பமாகியது அவன் வசைமாரி. அவனுடைய நாற்பத்தைந்து வருஷத்திய கால்கள் அந்த மூன்று வருஷத்துக் குழந்தையின் இடுப்பில் உதைத்த பொழுது—

அடுத்து ஒரே அழுகை; சிணுங்கல், ரகளை; அதன் நெஞ்சு உடைந்து போகும் வரையில் அழுகை; அவன் தலை பிளக்கும் போல அழுகை (இந்த நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் அவனுக்குத் தினமும் பழகியது தான்.)

அங்கேயே படுத்திருந்த தன்னுடைய பெரிய பெண், அந்தக் கலாட்டாவில் தூங்க முடியாதவளாய் எழுந்திருந்து, மூன்று வயதுக் குழந்தையை எடுத்து, தன் இளம் மார்போடு அணைத்துக்கொண்டு தகப்பனை

இமைகொட்டாமல் (இந்த நிகழ்ச்சி பல முறை நிகழ்ந்ததுதான்) பார்த்தாள்; பின்னர், தன் பக்கத்தில் சேர்த்து அணைத்துக் கொண்டு படுத்த பொழுது—

யாரோ அவன் கன்னத்தில் அறைந்தது போலவும், பல்லைப் பிடுங்கி கையில் கொடுத்தது போலவும், இருந்தது.

அவனைக் கண்டால் எல்லார் கண்களிலும் வெறுப்பா ?

நாற்பத்தைந்து வருஷத்தின் எல்லையில் நின்று பின் திரும்பி நின்று பார்த்த பொழுது—

“பைத்தியக்கார மனைவி, ஆறு நோஞ்சலான வற்றிக்கிடந்த குழந்தைகள், வாடகை வீடு, ஆஸ்த்மா நிறைந்த எலும்புக் கூடு. பழைய டப்பாக்கள், அலுங்கிய டிரங்கு, கிழிந்த குடை ...”

எல்லோரும் அவனைப் பார்த்தார்கள்; அலட்சியத்துடன் பாத்தார்கள்; அவர்கள் கண்ணில் கேலி; கிண்டல், ஏளனம்.

அவன் உடம்பு பரபரவென்றது. தலை மயிரைப் பிய்த்துக்கொண்டான். மத்தள ஒலி போல் அவன் ஆஸ்த்மா நெஞ்சிலிருந்து கொர் கொர் என்று சத்தம் வந்தது—

—தான் இன்னும் பிழைத்திருக்கக் கூடாது என்ற எண்ணம் அவனுக்கு மேலோங்கியது.

பிறகு இந்தக் குழந்தைகளின் கதி? மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ருமற் போய் விடுவானு ?

அவள் கதி? — அவளுடைய தகப்பனுரைப்போலவே நாதியற்றுச் சாகட்டும் !

தான் சாகவேண்டும்; கண்டிப்பாகச் செத்துப்போகவேண்டும்.

ஆனுல் எப்படிச் சாவது ?

எப்படியோ? சாகிற வழிக்கு வழிகாட்டி எதற்கு ?

கயிறு, ஆறு, விஷம் ஏதோ ஒன்று—கடைசியாக எதுவும் சிக்கவில்லை என்ருல் பிளேடின் துண்டு! (அதைக்கொண்டு உயிரை விட்டவர் இல்லையா ?) ஆனுல் எப்படியாவது சாகவேண்டும். அதுவும் பொழுது விடிவதற்கு முன்னுல்—

சாவின் வழியை நோக்கி, திட்டம் போடும் போது—

குழந்தையைப் பக்கத்தில் படுக்கவைத்துக்கொண்டிருந்த முதல்பெண், என்னவோ தூக்கத்தில் உளறிக்கொண்டு திரும்பிப் புரண்டு படுத்தாள். அப்படிப் புரண்டதால், மார்பின்மேல் இருந்த மேலாக்கு, சற்றே சரிந்தது, புடவையின் ஓரம் முக்கால் கால் வரை மூட மறந்துவிட்டது —

அவன் பார்த்தான். இவள் குழந்தை அல்ல; வயசுப் பெண் ஆகிக்கொண்டிருக்கிருள்...மறுகணமே, தான் அந்தப் பெண்ணின் தகப்பன் என்னும் பேருண்மை எழுந்து, நொடி நேர நினைவை எண்ணி மலையளவு வெட்கப்பட்டான்—

யாரோ சிரித்த மாதிரி இருந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு தன்னையே அவள் பார்த்துச் சிரித்தபடியே நின்றிருந்தாள்.

பைத்தியம் சிரித்தாள்; அவளில் இருந்த பெண் சிரித்தாள்; பெண்ணின் இதய மூலையிலிருந்து சிரிப்பின் அலை எழுந்து, இரும்புக் கம்பிகளைத் தாண்டி வந்தபோது—

அவன் நெஞ்சு .. துணுக்கென்றது. ‘என் மனத்தில் நிகழ்ந்த போராட்டம், பேச்சு, கண்டிப்பாக இவளுக்குக் கேட்டிருக்குமோ?’ அவள் கண்ணில், ஏளனச் சிரிப்பு.

அவள் திரும்பவும் சிரித்தாள்... மீண்டும் மீண்டும் அவள் சிரித்தாள்... அவளுடைய அந்தச் சிரிப்பின் ஊற்று ஜன்னல் கம்பிகளைத் தாண்டி, அவனுடைய எலும்புக்

கூட்டு நெஞ்சில் உறங்கிக்கொண்டிருந்த நாகப்பாம்புக்கு மகுடி ஊதிய நேரத்தில்—

அவன் எழுந்தான்...ஓடினான். அவளை நோக்கி ஓடினான். (ஐந்தே காலடியின் எலும்புக்கூடு, ஆஸ்த்மா நெஞ்சு, குச்சிக் கைகால்கள், ஆறு குழந்தைகளைச் சிருஷ்டித்தவன்—அவர்களை ஈன்ற தாயை நோக்கி ரோஷத்துடன் போனான்.)

"உன்னை முதலில் சாகடித்து, பிறகு நான் சாகிறேன் பாவி..."

மூடிக்கிடந்த கதவு திறந்தது; உள்ளிருந்த பெண் உருவம் மீண்டும் சிரித்தது; ஆணின் கோபக் கைக்குச் சிக்கிற்று. பெண்ணின் வழவழப்பான உடம்பு வழுக்கியது... (அடுத்த நிகழ்ந்தது விளக்க முடியாதது.)

* * *

கடைசிப் பாதையை நோக்கிச் செல்லும் பிரயாணிக்கு, ஆரம்பமே வழி காட்டியது போலாயிற்று! "என் தோளில் இருப்பது என்ன? பாவி...த்தூ" என்று அந்தப் பெண்ணைத் தூரத் தள்ளியபொழுது—தரையில் விழுந்த அந்தப் பெண் எதிரில் நின்ற ஆணைப் பார்த்துச் சிரித்தது.

அவள் கண்களில் உலகத்தின் மென்மையெல்லாம் நிரம்பியது. கண் இமைகளுக்கிடையே ததும்பிய நீரினூடே அவன் கண்டதென்ன?

'புதிய விளக்கின் தாலாட்டு.'

தமிழாக்கம் :

கமலா தாமோதரன்.

தமிழ் எழுத்தாளர் அறிமுகம்

புத்தக நண்பன் வாயிலாகப் பிற தென்மொழிகளில் இதுவரை அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ் எழுத்தாளர்கள் :

(i) புரட்சிக்கவி பாரதிதாசனார்
(ii) டாக்டர் மு. வரதராசனார்
(iii) நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை
(iv) கி. வ. ஜகந்நாதனார்

தென்மொழி எழுத்தாளர் அறிமுகம்:

டாக்டர் கே. வி. புட்டப்பா

'குவெம்பு' என்ற புகழ்ப்பெயருடன் திகழும் டாக்டர் கே. வி. புட்டப்பா கன்னடக் கவிஞர்களில் தலைசிறந்த ஒருவராவர். கல்வித் துறையிலும் அவர் சிறந்த பல பணிகளாற்றும் வாய்ப்புகளைப் பெற்ருர். மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் அவர் கன்னடப் பேராசிரியராகவும், பின்னர் மகாராஜாக் கல்லூரியின் தலைவராகவும், இறுதியில் மைசூர்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்ருர். கன்னடமொழிக் கவிஞர் ஒருவர் இந்த அளவுக்குப் பெருமை பெற்றது சிறப்பேயன்ரே. கன்னட மொழியில் சாகித்ய அகாதெமியின் ரூ. 5000 பரிசுத் தொகையை முதன் முதலில் பெற்றவர் அவரே. அவருடைய பரிசுக்குரிய நூலாகக் கருதப்பட்டது 'ஸ்ரீ இராமாயண தர்சனம்' என்பதாகும். மற்றும் இந்திய ஜனுதிபதியால் 'பத்ம பூஷன்' பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்.

டாக்டர் புட்டப்பா திரு. இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் மிகுந்த பற்றுக் கொண்டவர். அவர் ஓயாது ஒழியாது படித்துக் கோண்டே இருப்பவர். அவர் கன்னட மொழியுடன் நில்லாது, சம்ஸ்கிருதம், ஆங்கிலம், வங்காள இலக்கியங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். முதன் முதலில் 'ஆரம்பக் கவிதைகள்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதி வந்தார் என்பது பலருக்குத் தெரியாது. பேராசிரியர் கசின் (Cousin) என்பவரின் தகுந்த தூண்டுதலால் அவர் கன்னடத்தில் கவிதை இயற்றத் தொடங்கி, பிற்காலத்தில் பெருங்கவிஞராகப் புகழ் பெற்ருர்.

டாக்டர் புட்டப்பா கர்னுடகத்தின் இதயம் என்று சொல்லப்படும் மலைநாட்டில் பிறந்து வளர்ந்தார். இயற்கை வளம் நிறைந்த இந்தப் பகுதி அவர் கவிதைகளுக்குத் தனி அழகு தந்ததில் வியப்பில்லை. கவிஞர் வோர்ட்ஸ்வொர்த்தைப் போலவே அவரும் இயற்கையின் குழந்தை ஆனுர். மலைநாட்டின் மலைவளமும், துங்கா நதியின் இசையொலி மிக்க நீர்ப்பெருக்கமும், காடுகளின் கண்கவர் கவர்ச்சியும், வைகறையிலும் அந்தி நேரத்திலும் எண்ணற்ற பறவைகள் எழுப்பும் ஒலித் தொகுதியும் அவர் கவிதைகளில் அழகுடன் மிளிரக்காணலாம். இருபத்தைந்துக்கு மேற்பட்ட அவருடைய கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றில் 'அக்னி ஹம்ச', 'கொழலு' (குழல்), 'பட்சி காசி', முதலிய கவிதைத் தொகுதிகள் சிறப்பாக விளங்குவன. சம்ஸ்

கிருதத்தில் வெளிவந்த அவருடைய கவிதை மொழிபெயர்ப்புகள் சம்ஸ்கிருதப் பண்டிதர்களையும் கவர்ந்துவிட்டன. பழம் மரபுப்படி (மஹா சந்தஸு) அவர் இயற்றிய ஸ்ரீ இராமாயண தர்சனம், அவருடைய கவிதைத் திறனின் உச்ச நிலையையும் தத்துவத் துறையில் அவருடைய ஆழ்ந்த புலமையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கவிதைத் துறைக்கு மட்டுமல்லாது இலக்கியத்தின் மற்ற பல்வேறு துறைகளுக்கும் அவர் பணியாற்றியுள்ளார். 'பொம்மன ஹள்ளிய கிந்தர ஜோகி'(பொம்மன ஹள்ளியின் பாம்பாட்டி) குழந்தை இலக்கியத்துக்கு அவருடைய காணிக்கையாகும். 'கானூரு சுப்பம்ம ஹெக்டிதி' (கானூரின் கிராமத் தலைவி சுப்பம்ம) என்ற புதினம் புதுமையான மரபுகளும் நம்பிக்கைகளும் கொண்ட மலைநாட்டு மக்களின் வாழ்க்கையைத் தெளிவாகப் பிரதிபலிக்கும் முறையில் அமைந்துள்ளது. 'யமன சோலு' (யமனின் தோல்வி), 'பெரல் கே கொறல்' (கழுத்துக்கு விரல்), 'மஹாராத்ரி' போன்ற நாடகங்கள், தம் இசைச் சிறப்பால் படித்த மக்களைக் கவர்ந்ததுடன், நாடகங்களாக நடிக்கப்பட்டுப் பாமர மக்களையும் கவர்ந்துவிட்டன. மற்றும் அவர் தம்முடைய ஆழ்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளால் கன்னட மொழித் திறனாய்வுத்துறையையும் வளர்த்துள்ளார். அவர் மைசூரில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமத்துடன் கொண்ட தொடர்பும் வீண் போகவில்லை. 'ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சா', 'சுவாமி விவேகாநந்தா' என்ற இரு தலைசிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்களைக் கன்னட மொழிக்கு வழங்கியுள்ளார்.

கன்னட இலக்கியத்துக்கு ஒரு புத்துணர்ச்சியும், கன்னட மொழிக்குச் சொல் வளத்தையும் உருவாக்கித் தந்தவர் டாக்டர் புட்டப்பா என்பது மிகையாகாது.

———

SOUTHERN LANGUAGES BOOK TRUST

Forthcoming Books

In Tamil

1. Composite volume of short stories
2. Marathi Stories
3. Gujrathi Stories
4. Black Panther of Sivanipalli–II
5. Lessons of Indian History (by Prof. Humayun Kabir)
6. Dance Book for Children
7. Stories from Panchatantra.

தென்மொழி எழுத்தாளர் அறிமுகம்:

முகம்மது பஷீர்

வைக்கம் முகம்மது பஷீர் சற்று மாறுபட்ட எழுத்தாளராவார். பொதுவாகச் சொல்லவேண்டுமானால் அவர் எழுத்தாளரே அல்லர். அவர் பேச்சாளர் என்றுதான் சொல்லவேண்டும். அவர் தம் நூல்கள் வாயிலாகப் பேசுகிறார். அவர் பெரும்பாலும் தன்னைப்பற்றிப் பேசுகிறார் என்று சொல்லலாம். அவர் தன்னைப்பற்றிப் பேசினாலும் தாம் சொல்வதைக் கேட்பவர்கள் அலுத்துப் போகாத வகையில் பேசக்கூடியவர். அவர் பலதரப்பட்ட அனுபவமுடையவர். மற்றும் தம்மைப்பற்றியே பெருமைப் படுத்திக்கொள்வதில்லை.

கேரளாவில் வைக்கம் அருகில் தலையோலப் பறம்பு என்ற ஊரில், முகம்மதியக் குடும்பத்தில் அவர் பிறந்தார். அவர் நான்காம் அல்லது ஐந்தாம் படிவத்துடன் தம் படிப்பை நிறுத்திவிட்டு அரசியலில் இறங்கிவிட்டார். நாடு முழுவதும் சுற்றத் தொடங்கினார். அவருடைய புரட்சி உள்ளம் வங்காள பயங்கர இயக்கத்திற்கு அவரைக்கொண்டு சேர்த்தது. அதற்காக இருமுறை சிறையிலும் அடைக்கப்பட்டார். சிறுகச்சிறுக அரசியலை விட்டுவிட்டு எழுத்தாளராக மாறலானார். கடந்த முப்பதாண்டுகளாகப் பல்வேறு இடங்களில் சுற்றிவிட்டுத் தற்பொழுது தலையோலப் பறம்பில் நிலையாகத் தங்கியுள்ளார்.

அவருடைய துவக்க கால நூல்களில் 'அநார்க நிமிஷம்', 'ஜன்மதினம்', 'பால்ய கால சகி', 'கதா பீஜம்' (கதைவித்து) முதலியன சிறந்தவை. வழக்கம்போல இளைஞன், இளம் பெண்ணுக்கிடையே மலரும் காதலை அடிப்படையாக்கிப் பின்னப்பட்ட சிறிய புதினமே 'பால்ய கால சகி.' வழக்கம்போலவே கதை அவலத்தில் முடிகிறது. ஆனால், தெளிவிலும் நேரடியாகச் சொல்வதிலும் இதற்கு இணையான புதினம் வேறொன்றும் இல்லை என்று போற்றப்படுகிறது. 'கதா பீஜம்' ஓர் எழுத்தாளரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. அதன் கதாநாயகன் ஆசிரியரையே பிரதிபலிக்கிறான். பஷீரின் மற்றொரு தலை சிறந்த புதினம் 'ண்டுப்புப்பாக்கொரானெண்டார்ன்னு' (உங்கள் தாத்தாவுக்கு ஓர் யானை இருந்தது) என்பதாகும். உலகம் தெரியாத குஞ்சு பாத்துமா, அவள் குடும்பத்தைப்பற்றிய கதை ஆகும் இது. அவள் தாயாரின் வாயிலாக அவர்களுடைய பழம்பெருமை அவள் வாழ்க்கையைப் பாழடிக்கிறது. மலையாள இலக்கியத்தில் எளிமையின் வடிவமான குஞ்சு பாத்துமா ஒப்பில்லாத ஒரு பாத்திரமாகும். 'பாத்துமையுடே ஆடு' (பாத்துமையின் ஆடு) என்ற அவருடைய அண்மைப் புதினம் முழுவதும் அவர் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும்.

'சப்தங்கள்', 'மரணத்திண்டே நிழலில்' என்ற இரு சிறிய புதினங்களும் பேரளவு கிளர்ச்சியைத் தூண்டிவிட்டன. வாழ்க்கையில் அருவருப்பை உண்டாக்கும் பல அவற்றில் இடம் பெற்றுள்ளன. 'சப்தங்கள்' மிகவும் அருவருப்பான, கீழ்த்தரமான, மோசமான ஒரு புதினம் என்று சிலரால் கூறப்படுகிறது. ஒரு சிலரே அதை ஒரு புதினமாக ஏற்றுக்கொண்டனர். மனித வாழ்க்கையை மூடி இருக்கும் திரையைக் கிழித்து

அவர் உண்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். பழிதீர்க்கும் உணர்ச்சி கெட்டெண்ணம் முதலியவற்றால் உந்தப்பட்டு, சீர் கெட்டுப்போகும் ஒரு தலை முறையைப் பற்றி அவர் அதில் குறித்துள்ளார். உண்மையை விளக்குவதற்காக உண்மைக் கப்பாற்பட்ட உண்மையற்றவை, கண்ணுக்குத் தெரியாத வற்றையும் பயன்படுத்தியுள்ளார். உண்மைத் தன்மை வரையறையற்ற கற்பனைக்கு இடமளித்துவிட்டது. அழகுக்கு பதிலாக அருவருக்கத்தக்கவையும், சுவையில் மட்டமானவையும் இடம் பெற்றுவிட்டன.

அவருடைய மற்ற சிறந்த நூல்கள் 'ஸ்தலத்தே பிரதான திவ்யன்' (கிராமத்துப் பெரிய மனிதன்), 'முச்சீட்டு களிக்காரண்டே மகள்' (முச்சீட்டு விளையாட்டுக்காரனின் மகள்), 'விட்டிகளுடே சுவர்கம்' (முட்டாள்களின் சொர்க்கம்), 'அம்மா' முதலியன வாகும். இவற்றில் சில சிறுகதைத் தொகுப்புகள், மற்றவை ஒரு சில பாத்திரங்களை வைத்துப் பின்னப்பட்ட தொடர் கதைகளாகும். உயர்ந்த வகை நகைச்சுவைப் போர்வையில் ஆழ்ந்த அவலச்சுவை அவருடைய எழுத்துக்கள் யாவற்றிலும் நிறைந்திருக்கக் காணலாம்.

சுய வரலாற்றைக் கூறுவது போல் அமைந்துள்ள ஒரு புதினத்தில் அவருடைய தம்பி அவரைக் கேட்பதுபோல ஒரு பகுதியை அமைத்துள்ளார்: "நீ ஒரு புகழ் பெற்ற எழுத்தாளன் என்று சொல்கிறார்கள். நானும் உன் புத்தகங்கள் சிலவற்றைப் படித்தேன். ஆனால், எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் எங்கே இருக்கின்றன. இவையெல்லாம் வாக்கியத்திற்கு முக்கியமில்லையா? நான் சொல்வதைக் கேள், நீ இன்னும் இலக்கணம் படிக்கவேண்டும்."

ஆம், உண்மைதான். அவர் இன்னமும் இலக்கணம் கற்கவேண்டும். இலக்கியப் பண்டிதர்களும் திறனாய்வாளர்களும் அதைத்தான் கூறுகின்றனர். பஷீர் சொற்களை வேடிக்கையான முறையில் அமைப்பார். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அவர் இலக்கண வரம்புக்குட்பட்டு எழுதுவதில்லை.

வயதான தலைமுறை அவரைத் தறுதலை என்று கருதுகிறது. ஆனால் இளைய தலைமுறையோ அவரை முன்னோடியாகவும் குருவாகவும் போற்றுகிறது.

ஒரு வகையில் மொழிபெயர்ப்பு கல்வி புகட்டுவது போன்றதே. ஒவ்வொருவரும் அது மிகவும் எளியது என்றே கருதுகின்றனர். அதில் ஈடுபட்டிருப்பவர்களைக் குறைகூறிக்கொண்டே இருப்பது அவர்களுடைய பொழுதுபோக்கு. ஆனால் அவர்களும் ஒரு முறை அப்பணியில் ஈடுபட்டால் அப்பொழுதுதான் அதிலடங்கியுள்ள தொல்லைகள் அவர்களுக்குப் புலனாகும். குறை நிறைந்த ஆசிரியன் பணிபுரிவதுபோலவே குறைபட்ட மொழிபெயர்ப்பாளனும் எளிதில் தன் வேலையை முடித்துவிடுவான். ஆனால் இருவராலும் விளையும் கெடுதல்கள் ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல.

—கே. எஸ்.

தென்மொழி எழுத்தாளர் அறிமுகம்

சிவசங்கர சுவாமி



திரு. சிவசங்கர சுவாமி புதுமைத் தெலுங்கு இலக்கியத்தின் சிற்பிகளில் முதன்மையானவராகத் திகழ்கிருர். சன்னியாசம்ஏற்றுக்கொள்வதற்குமுன்னர் தல்லாவஜ்ஜல சிவசங்கர சாஸ்திரி என்ற பெயருடன் விளங்கினர். 1920–21 ஆம் ஆண்டுகளில் தெலுங்கு எழுத்தாளர் பலரை மேனுட்டு மரபுகளை ஒட்டி எழுதும்படியாகத் தூண்டினர். இன்று அவர்களில் பலர் தலை சிறந்த எழுத்தாளராக விளங்குகின்றனர். தெலுங்கு இலக்கியத்தில் புதிய மரபுகளைத் தூண்டுவதற்கென 'சாஹிதி சமிதி', 'நவ்ய சாஹித்ய பரிஷத்' என்ற இரு சங்கங்களைத் தோற்றுவித்தார். இந்தச் சங்கங்களின் வாயிலாக வெளியிடப்பட்ட 'சாஹிதி', 'சகி', 'பிரதிபா' என்று இலக்கிய இதழ்களும் அவருடைய முயற்சியால் உருவானவையே. இன்றைய பல சிறந்த தெலுங்கு எழுத்தாளர்களும் இந்த இதழ்களின் வாயிலாகவே அறிமுகப் படுத்தப்பட்டனர்.

திரு. சிவசங்கர சுவாமி குண்டூர் மாவட்டத்தில் வைதீக அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். மெட்ரிகுலேஷன் தேர்வுக்குப் பிறகு அவர் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டு சம்ஸ்கிருதம், தர்க்கம், அத்வைதம், வேதாந்தம் முதலியவற்றைப் பயிலத் தொடங்கினர். பின்னர் மராத்தி, ஹிந்தி, உருது, பெங்காளி, கன்னடம், லத்தீன், ஃப்ரெஞ்ச், ஜெர்மன், ப்ராக்ரித், வேதமொழி முதலிய பல மொழிகளைக் கற்ருர்.

இந்தப் பயிற்சி எல்லாம் தற்கால எழுத்து மரபுகளைப் பரிகசிக்கும் பழைமை விரும்பிகளை எதிர்த்து உண்மையை நிறுவுவதற்கு அவருக்கு மிகவும் பயன்பட்டது. பயிற்சியுடன் நின்றுவிடாமல் அவர் ஒழிவின்றி எழுதி, தெலுங்கில் புதிய மரபுகளை ஒட்டிப் பற்பல நூல்கள் எழுதிக் குவிக்கலானர்.

'ஹ்ருதயேஸ்வரி' என்ற அவருடைய கவிதைத் தொகுப்பு பிற்காலத்தில், திரு. விஸ்வநாதா, திரு. கிருஷ்ண சாஸ்திரி போன்ற பெருங் கவிஞர்க்கும் வழிகாட்டியாக அமைந்தது. 'பத்மாவதி சரண சாரண சக்ரவர்த்தி' என்ற அவருடைய முழு நீளக் கவிதை நாடகம் தெலுங்கிலேயே தலைசிறந்ததெனக் கருதப்பட்டதுடன் அரங்கிலும் வெற்றிகரமாக நடிக்கப்பட்டது. சம்ஸ்கிருதத்தில் சிறந்த கவிஞராகத் திகழ்ந்த ஜெயதேவா, நாட்டியக்காரியான பத்மாவதி இருவருக்கிடையே இருந்த காதலையும், 'கீதகோவிந்தம்' என்ற தலைசிறந்த காவியத்தை

உருவாக்குவதற்கு அந்தக் காதல் எவ்வாறு தூண்டுகோலாக அமைந்தது என்பதையும் இந்த நாடகத்தில் திறம்பட விளக்கி யுள்ளார்.

'வகுள மாலிக' (மகிழ மாலை) என்ற காவியமும் அவருடைய சிறந்த காவியங் களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. தான் அழகுசெய்த ஒரு காதலனைப் பற்றி அந்த மாலையின் கூற்று வடிவத்தில் இது அமைந் துள்ளது.

1953 ல் அவருடைய மணிவிழா நடை பெற்றபொழுது அவருடைய கவிதைகள், கதைப் பாடல்கள், கவிதை நாடகங்கள், கட்டுரைகள் முதலியவற்றின் பெரிய தொகுப்பு நூல் ஒன்று வெளியிடப்பட்டது.

தமது சொந்தப் படைப்புகளுடன் அவர் பல மொழிபெயர்ப்புகளையும்வழங்கியுள்ளார். சமஸ்கிருதத்திலிருந்து 'கதா சரித்சாகரம்' முதலியவற்றையும், பாலியிலிருந்து ஜாத கக் கதைகளையும், பெங்காளி ஹிந்தி மொழி களிலிருந்து பல புதினங்கள், நாடகங்களை யும்—குறிப்பாக இரவீந்திரரின் 'கோரா', மொழிபெயர்த்துள்ளார்.

இலக்கிய ஈடுபாட்டுடன் சிவசங்கர சுவாமி உரிமைப் போராட்டத்திலும் அதிகப் பங்கேற்றிருந்தார். அதன் காரணமாகச் சில முறை சிறைக்கும் சென்றுள்ளார். அவ ருடைய வாழ்க்கையில் மற்ருெரு சிறப்புத் தன்மை அவருடைய தத்துவ விசாரணைப் போக்காகும். இளமையிலிருந்தே தத்துவத் துறையில் ஈடுபாடுகொண்டிருந்த அவர் 1953 ல் துறவு பூண்டு காவி உடுக்கத் தொடங்கினுர்.

அவருடைய இலக்கியப் பணியை உணர்ந்த ஆந்திரர்கள் அவரைப் பல நகரங்களிலும் கௌரவித்து 'நவ்ய சாஹித்ய ஆச்சார்யா' (இன்றைய இலக் கிய ஆசான்) என்ற பட்டப் பெயர் வழங்கி யுள்ளனர்.

எழுபதாண்டு வாழ்க்கையை இலக் கியத்துக்காகச் செலவழித்த பின்னர், அவர் இப்பொழுது குண்டூர் மாவட்டத்தில் வேட பாலம் என்ற இடத்திலுள்ள ஆசிரமத்தில் துறவு வாழ்க்கை வாழ்ந்து வருகிருர். ஆனல் இப்பொழுதும் இலக்கியத் துறை யில் அவருடைய அறிவுரைகள் கேட்டு ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. மத்திய சாஹித்ய அகாதெமியிலும் அவர் முக்கிய அங்கத்தினராக இருந்து பணியாற்றி வருகிருர்.

——

அஞ்சறைப் பெட்டியில் இன்ன இடத்தில் கடுகிருக்கிறது என்பதை அறிய சமையலறையில் புழங்கும் ஒரு மனைவிக்குக் கண் விழித்துப் பார்க்க வேண்டுமென்பதில்லை. குறிப்பாகவே தேவையான பொருள்களை எடுக்கக் கை தானுகவே இயங்கும். அதுபோல் கதைக்கான கருத்தும் கருவும் உயிர்த்துத் தூண்டுதல் உண்டானதுமே எழுதும்போது கதைக்கு வேண்டிய தொடர் பான நிகழ்ச்சிகள், கற்பனைகள், சொற்கள் எல்லாமே அநேகமாக வந்து சேரும்.

—ராஜம் கிருஷ்ணன்.

புத்தகப் பூங்கா

இப்சென் நாடகங்கள்

தமிழாக்கம் :
டாக்டர் துரை அரங்கசாமி
சாகித்திய அக்காதெமி, சென்னை–2
வெளியீடு :
ஸ்டார் பிரசுரம், சென்னை–5
விலை : ரூ. 5·00

மகாகவி பாரதி பாடி யிருக்கிறார் :

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்'

என்று. அவர் அறிவுரை செய்துள்ளபடி சாகித்ய அக்காதெமி, தென்மொழிப் புத்தக டிரஸ்ட் ஆகிய ஸ்தாபனங்கள் பெருமளவில் பிறநாட்டு நல்லறிஞர்களின் இலக்கியங்கள் பலவற்றை, பொதுவாக இந்திய மொழிகளிலும், சிறப்பாகத் தென்னிந்திய மொழிகளிலும் ஆக்கித் தந்துவருகின்றன.

அண்மையில், சாகித்ய அக்காதெமியார் ஹென்றி இப்சென் (Henrik Ibsen) என்ற நார்வே நாட்டுப் பிரபல நாடகாசிரியரின் நாடகங்களில்'The Vikings of Helgiland', 'Ghosts' என்ற இரு சிறந்த நாடகங்களை, 'ஹெல்கிலாந்து கடற் கொள்ளைக்காரர்கள்', 'பேய்கள்' என்று பெயரிட்டு, இப்சென் நாடகங்கள் என்ற தலைப்பில் தமிழில் வெளியிட்டிருக்கின்றனர்.

இப்சென் நாடகங்களுக்கு இன்று விமரிசனஞ் செய்வதென்பது அவசியமற்ற ஒன்று. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அறிஞர் பலருடைய விமர்சனங்களை யெல்லாம் ஜீரணித்துக்கொண்டு இவை இலக்கிய உலகில் பெரும் புகழுடன் நிலைத்திருப்பவை. காளிதாசன், ஷேக்ஸ்பியர், மோலியர், செகாவ் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற நாடகப் பேராசிரியர்களின் வரிசையில் வைத்து மதிக்கத்தக்கவர் இப்சென். மேனாட்டில் ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடியாக இப்சென்தான் சிறந்த நாடகாசிரியர் எனப் பாராட்டப்பட்டு வருகிறார். ஏனெனில், நாடகத் துறையில் ஷேக்ஸ்பியரைப் போல் நாடக அனுபவத்திலும் நடிப்பதற்கு ஏற்ற முறையில் நாடகங்களை உருவாக்கிய திறனிலும் சிறந்து விளங்குபவர் இப்சென். நாடக இலக்கியத்தின் பயனை நன்குணர்ந்து நாடகம் இயற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் இப்சென் ஆவார்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் கலை இலக்கியங்களில் தலை சிறந்து விளங்கியது பிரான்சு. காலப் போக்கில் கலை இலக்கியங்கள் வெறும் பொழுதுபோக்கு சாதனங்களாக மாற்றப்பட்டு வந்ததும், அவற்றின் தரமே குறையலாயிற்று. இவ்வித அவல நிலையை மாற்றிக் கலை இலக்கியங்களுக்குச் சிறந்த இலட்சிய மொன்று உண்டு எனக் கூறி நாடக இலக்கியத்தில் ஒருவித மறுமலர்ச்சியை உண்டுபண்ணியவர்களில் முதன்மையாகக் குறப்பிடத்தக்கவர் இப்சென் ஆவார்.

பிரஞ்சுநாட்டு நாடக அரங்கையும் நாடக அமைப்பையும் முன்மாதிரியாகக் கொண்டு இப்சென் நார்வே நாட்டு நாடகக்கலைக்குப் புத்துயிர் ஊட்டினார். நார்வே நாட்டு மக்களின் குணஞ்செயல்கள், சமுதாய அமைப்பில் ஆண் பெண்களுக்கிடையே நிலவிய ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக்காட்டித்திருந்துவதற்கு இப்சென் தம் நாடகங்களைக் கருவிகளாகக் கொண்டார். 'A Doll's House,

Ghosts, Rosmershalmn Hedd Gabler, When we Dead Awake'போன்ற நாடகங்கள் மக்களின் அறியாமையையும் அவல வாழ்வையும் நையாண்டி செய்து சமுதாயப் பிரச்னைகளைச் சிந்திக்கத் தூண்டுவனவாய் அமைந்திருக்கின்றன. இவ்விதம் அவர் தம் நாட்டு மக்களின் சமூகப் பிரச்னைகளில் புரட்சிகரமான கருத்துக்களை அழுத்தந் திருத்தமாக வெளியிட்டதாலேயே இப்சென் அழியாப் புகழ்பெற்றார். முப்பதாவது வயதிலிருந்து எழுதத் தொடங்கிய இவர் ஆரம்ப காலத்தில் சரித்திரக் காதல் நாடகங்களை எழுதலானர். ஆனாலும், 50 வயதுக்குமேல் இவர் எழுதிய சமூக நாடகங்களே இவரைச் சிறந்த நாடகாசிரியர் என உலகுக்கு அறிவித்தன. நாடகக் கதையமைப்பும் ஆழ்ந்தகன்ற கருப்பொருளுமே இவருடைய பிற்காலச் சமூக நாடகங்களுக்குச் சிறப்பளிக்கலாயின. இத்தொகுப்பில் உள்ள 'ஹெல்கிலாந்து கடற் கொள்ளைக்காரர்கள்', 'பேய்கள்' ஆகிய இரு நாடகங்களிலுமே மனிதவாழ்வில் விதி எப்படி புகுந்து வினையை உண்டாக்குகிறது என்ற உண்மை சித்திரிக்கப்பட்டிருந்தாலும், 'பேய்கள்' என்ற நாடகத்தில் ஆடவர்க்கும் மகளிர்க்கும் இடையே ஏற்படும் நேசத் தொடர்பின் விளைவாக உண்டாகும் கோளாறுகளை மிக அழகாக எடுத்துக் காட்டிச் சிறக்கச் செய்திருக்கிறார்.

இப்சென் நாடகங்கள் வெற்றிகரமாக அமைந்து பிரசித்திபெற்றதற்கு முக்கிய காரணம் இவர் ஷேக்ஸ்பியரைப் போலவே நாடக அரங்க அனுபவம் பெற்றிருந்தது தான் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இளமையில் ஏறக்குறைய 13 ஆண்டு காலம் நாடக அரங்கில் பெற்ற அனுபவம் இவரைச் சிறந்த நாடகாசிரியராக்கி யிருக்கிறது. நாடகாசிரியர்களுக்கு நாடக அரங்க அமைப்பு, அதன் கலை நுணுக்கங்கள் கூடுமானவரை தெரிந்திருக்கவேண்டியது அவசியம் என்ற இவ்வுண்மையை நம் நாட்டு நாடகாசிரியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இப்சென் நாடகங்கள் பல நடிப்பதற்கு மட்டுமல்ல; படிப்பதற்கும் ஏற்றவையாகும். ஆனால் இத்தொகுப்பிலுள்ள தமிழாக்கம் படித்தறிந்து மகிழ்வதற்கு மட்டுமே ஓரளவு பயன்படும். நடிக்க முடியாது. ஏனெனில் அம் முறையில் இவை தமிழாக்கப்படவில்லை. இதற்கு முன் வெளிவந்துள்ள ஷேக்ஸ்பியர் நாடகத் தமிழாக்கம்கூட, இவ்விதம்தான் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் நாடக அரங்கிலும் நடிக்கத்தக்க வகையில் மேற்குறித்த நாடகங்கள் தமிழாக்கப்பட்டால், வளரும் தமிழ் நாடகக் கலைக்குப் பேருதவியாக இருக்கும்.

மற்றொன்று. ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழியில், கட்டுரை, கதை, நாடகம் முதலியவைகளைக் கொண்டுவரும் பணியை மேற்கொள்வோர் முக்கியமாக ஒரு விஷயத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். வார்த்தைக்கு வார்த்தை நேர் மொழி பெயர்ப்பு செய்ய முயலுவதைவிட, மூலத்தை ஒரு முறை நன்கு படித்துப் புரிந்துகொண்டு, மூல ஆசிரியரின் கருத்தையும் உணர்ச்சியையும் தாம் மொழிபெயர்க்கும் மொழியில் கொண்டு வர முயலவேண்டும். அப்போதுதான் பிற மொழி இலக்கியங்களைத் தாய் மொழியில் தரும் நோக்கம் நன்கு நிறைவேற முடியும். ஒவ்வொரு மொழிக்குமே ஒரு தனிச் சிறப்பு உண்டு; சொல்லாட்சி உண்டு; மரபு உண்டு. அவற்றை மற்றொரு மொழியில் அப்படியே கொண்டுவர முடியாது. மொழி பெயர்க்கப்படும் மொழிமரபை யொட்டி, சொல்லாட்சி முதலியவைகளை மேற்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் தான் மொழிபெயர்ப்பு சிறப்பாக அமையும், கருதிய பயனையும் தரும். இத்தொகுப்பிலுள்ள இரு நாடகங்களின் தமிழாக்கத்தில்

சிற்சில இடங்களில் உரையாடல்கள் தெளிவில்லாமலும், பொருள் மயக்கம் தரும் நிலையிலும் இருக்கின்றன என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. திருத்திப் படிக்கவேண்டுமென்று தனியாக அறிவிக்க வேண்டிய அளவுக்குப் பிழைகள் மலிந்திருக்கும்படியாக நேராமல் தவிர்த்திருக்க வேண்டும். அழகிய முறையில் அச்சிடப்பட்டுள்ள இப்புத்தகத்தின் சிறப்பை, பிழை திருத்தப் பகுதி குறைத்து விடுகிறது.

மற்றப்படி, டாக்டர் துரை அரங்கசாமி இப்சென் நாடகங்களை நல்ல முறையில் தமிழாக்கித் தந்திருக்கிறார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமைமிக்க இவர்போன்றார்தாம் இப்சென் போன்ற உலக இலக்கிய மேதைகளின் நூல்களைத் தமிழாக்கித் தர முடியும். இவருக்கு நம் பாராட்டுகள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் ஆங்கில இலக்கிய விரிவுரையாளரான குமாரி எம். சி. பிராட் புரூக் இப்செனைக் குறித்து மிக அழகாக ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார். இப்செனைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்கு இது ஓரளவு உதவும்.

நாரண துரைக்கண்ணன்

—

இதுவா நாகரிகம்?

(இரு வங்க நாடகங்கள்)

மூல ஆசிரியர்:
மைகேல் மதுசூதன தத்தர்

தமிழாக்கம்:
ஈசுவர சந்திரசேகர சாஸ்திரி
(வங்கத் தமிழன்)

வெளியீடு:
சாகித்திய அக்காதெமி, புதுடெல்லி-1

விற்பனை உரிமை:
என். சி. பி. எச். பிரைவேட் லிமிடெட்,
சென்னை-2

விலை: ரூ. 1-50

சென்ற நூற்றாண்டின் மத்தியில் வங்காளத்தில் வாழ்ந்த மைகேல் மதுசூதன தத்தரின் இரண்டு நாடகங்கள் தமிழாக்கப்பட்டு சாகித்திய அக்காதெமியின் ஆதரவில் வெளியிடப்பட்டுள்ளன. இன்றைக்குச் சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்தவர் இந்த நாடகாசிரியர். ஆங்கில மொழி, நாகரிகம் இரண்டும் அவரைப் பெரிதும் கவர்ந்ததன் விளைவாக மதுசூதனருக்குத் தாய்மொழியான வங்காளியின் மீதும், ஹிந்து மதத்தின் பழக்க வழக்கங்கள் மீதும் வெறுப்பேற்பட்டது. கிறிஸ்துவராக மதம் மாறி மைகேல் மதுசூதன தத்தர் என்ற பெயரையும் பெற்றார். கிறிஸ்தவராக இருந்து கொண்டு தாம் முன்பு அசட்டை செய்த சமயதத்துவங்களை ஆராய்ச்சி செய்தபோது அவர் கண்கள் திறந்தன. நம் நாட்டு ஆசாரங்களும் பண்புகளும் இகழத்தக் கனவல்ல, போற்றபடவேண்டியவையே என்பதைப் புரிந்துகொண்டார். அவருடைய மனப் புரட்சியின் விளைவாகப் பல கவிதைகளும், நாடகங்களும் உருவாயின.

இந்தச் சிறு நூலில் மதுசூதன தத்தரின் இரண்டு நாடகங்கள் அடங்கியுள்ளன. 'இதுவா நாகரிகம்?' என்ற முதல் நாடகத்தில் கல்கத்தா நகரத்தில், பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த நாகரிக வாலிபர்கள், தங்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் குடியிலும், பரத்தமையிலும் பணத்தைச் செலவு செய்து சீரழியும் விவரங்கள் ஒளிவு மறைவின்றி நேர்முக வர்ணனையைப் போலத் தரப்பட்டுள்ளன.

நவகுமாரும் அவனுடைய நண்பன் காளிநாத் என்பவனும், தெய்வபக்தியும் ஆசார சீலமும் கொண்ட நவகுமாரின் தந்தையிடம் தங்களுடைய 'ஞான தரங்கிணி சங்க'த்தைப்பற்றிக் கூறி ஏமாற்றும் கட்டத்தில் ஆசிரியரின் நகைச்சுவை நன்கு புலனாகிறது. பகவத்கீதை, கீதகோவிந்தம் என்று சொல்லத் தெரியாமல் காளிநாத் உளறிக் கொட்டுவதும், நவகுமார் நிலைமையைச் சமாளிப்பதும் ரசமான இடம் என்றே

சொல்லலாம். அந்தப் பெரியவரால் அனுப்பப்பட்ட அப்பாவியான ஒரு சாமியார், 'ஞானதரங்கிணி சங்கம்', 'அறிவு அலைகள் அடிக்கும்' சங்கமென்று தவறாக நினைத்துக் கொண்டு அதைத் தேடிவந்து, அது மது மாமிசங்களின் நாற்றம் அடிக்கும் சங்கம் என்பதைக் கண்டுபிடிக்கும் அனுபவத்தில் ரசத்தோடு விரசமும் கலந்திருக்கிறது.

வசதிமிக்க குடும்பத்திலே வந்த அந்தக் காலத்து வங்காளி இளைஞர்கள் எப்படி மதுவுக்கும் மங்கைக்கும் தங்கள்யௌவனத்தைப் பலி கொடுத்தனர் என்பதையும், குடும்பப் பெண்மணிகள் இவர்களுடைய கூத்தைத் தடுக்கும் ஆற்றலற்று இருந்தனர் என்பதையும் இந்நாடகம் விவரிக்கின்றது.

'இடிந்த சிவன் கோவில்' என்ற இரண்டாவது நாடகத்தில் வங்காளத்துப் பிரபல ஜமீந்தார் பரம்பரையில் வந்த ஒருவர் மீசை நரைத்தும் ஆசை நரைக்காமல் தன்னுடைய ஜமீன் அதிகாரத்துக்குட்பட்ட குடித்தனக்காரர்களைக் கொடுமை செய்கிறார். அவர்களிடையே உள்ள அழகான திருமணமான இளம் பெண்கள் மீது ஆசைப்பட்டு அவர்களைத் தம் வசப்படுத்த ஆட்களை ஏவி விடுகிறார். இந்த ஆசாமிகள் ஜமீந்தாரிடமிருந்து வேண்டிய பணத்தைக் கறந்துகொண்டு சம்பந்தப்பட்ட பெண்களுடன் நயவஞ்சகமாகப் பேசி வலை விரிக்கிறார்கள். முஸ்லிம் மாது ஒருத்தியின் மீது கொண்ட மோகம் ஜமீந்தாரின் உயிருக்கு அவள் கணவன் யமனாக வந்துவிடுகிற அளவில், கதையை விறுவிறுப்பாக ஓட்டிக் கடைசியில் ஜமீந்தாருக்கு உயிர்ப்பிச்சை அளிக்கிறார் ஆசிரியர். ஜமீந்தாருக்கும் ஞானோதயம் ஏற்பட்டுத் தான் செய்த தீங்குகளுக்கு வருந்துகிறார்.

இந்த இரண்டு நாடகங்களையும் ஹாஸ்ய நாடகங்கள் என்று ஒப்புக்கொள்வதற்கில்லை. நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த வங்க மக்களின் ஒரு பகுதியினரின் வாழ்க்கையைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ள சில காட்சிகள் இவை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஒரு சில இடங்களில் நையாண்டி அழுத்தமாக விழுந்திருக்கிறது. நாடகங்களுக்குக் கதைக் கருவாக எடுத்துக்கொண்ட விஷயம் ரசக்குறைவானது ஆகையால் விரசம் தட்டாதவாறு கதையை நடத்தவேண்டும் என்ற ஆசிரியரின் நோக்கம்—அப்படி என்று ஒன்று அவருக்கு இருப்பதாக நாம் கொள்வோமானால்—முற்றும் நிறைவேறி இருக்கிறது என்று சொல்ல முடியாது. பங்கிம் சந்திரரும், சரத்சந்திரரும், ரவீந்திரநாத்தும் மதுசூதன தத்தர் கையாண்ட பாத்திரங்களைக் கூடுதலான கலையம்சத்தோடு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வெற்றி கண்டுள்ளார்கள்.

இந்த நாடகங்களின் தமிழாக்கம் மிகவும் சிறப்பான முறையில் அமைந்துள்ளது. வேற்று மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது என்ற உணர்வே படிப்பவர்களுக்கு ஏற்படாதவாறு தமிழாக்கத்தைத் திறம்படச் செய்திருக்கிறார் ஸ்ரீ ஈசுவர சந்திர சேகர சாஸ்திரி. 'வங்கத் தமிழன்' என்ற அவர் புனைபெயர் ஒலிப்பதுபோலவே சரளமான அழகு தமிழில், தத்தரின் நாடகங்களுக்குத் தமிழ் உருவம் தந்திருக்கிறார்.

மைகேல் மதுசூதன தத்தரின் இந்த நாடகங்களைவிடச் சிறந்த வேறு நூல்களை முக்கியமாக அவர் கவிதைகளைச் சாகித்திய அக்காதெமியார் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று பொருள் படும் வகையில் இந்த நூலுக்கு முன்னுரையாகத் தத்தரின் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதியுள்ள பேராசியர் ஹுமாயூன் கபீர் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

"மகரம்"

ரவீந்திரர் கவிதைத் திரட்டு

ரவீந்திர நாத் டாகூரின்
நூற்றொரு கவிதைகள்

தமிழாக்கம்: த. நா. குமாரஸ்வாமி.

சாகித்திய அக்காதெமி, புது டெல்லி.

பக்கங்கள் : 220

விலை : ரூ. 5/-

கவிதைப் பொன்னுலகில் சுடர்விட்டுத் திகழும் ஒரு சிகரமெனக் கவி டாகூர் இலங்குகின்றார் என்பது சொல்லாமலேயே விளங்கும். இவர் புகாத இலக்கியத் துறைகளும் கருத்துலகங்களும் இல்லை என்றே இயம்பலாம். இவர் அமைத்த படைப்புக்கள் யாவும் ஓர் அழியா அமர முத்திரை பெற்றுப் பொலிந்து நிற்கின்றன.

ரவீந்திரர் கவிதைத் திரட்டை நல்கிய சாகித்திய அக்காதெமி சிறந்த பணியாற்றியுள்ளது; அதை மிகக் கவின் பெறுந் தமிழாக்கஞ் செய்த திரு. த. நா. குமாரஸ்வாமி அவர்கட்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

இந்நூலுக்கு 'ரவீந்திரரின் கவிதைகள்' என்ற தலைப்பின் கீழ் ஹுமாயூன் கபீர் அளித்த அணிந்துரை மிகவும் போற்றற்குரியது. இந்நூலில் கோயில்கொண்ட கவிதைகளுக்கு அவர் விளக்கந் தந்திருக்கிறார். இவ்விளக்கம் அவருடைய நுண்ணறிவையும், ஆழ்ந்த சிந்தனைச் செறிவையும் நன்கு புலப்படுத்துகின்றது.

புராணங்களிலும், இதிகாசங்களிலும், உபநிடதங்களிலும் அலர்ந்துள்ள சந்தர்ப்பங்களைத் தம் கற்பனைத் தறியில் வைத்துக் காலத்தால் குலையாதபடி நெய்து தந்த இலக்கியப் படைப்புக்களை என்னென்று சாற்றுவது! கசனுடைய சான்றாண்மை 'விடை பெறுகையிலே சாபம்' என்ற கவிதையில் மிளிர்கின்றது. காந்தாரியின் முறையீட்டை நாம் மறக்க இயலுமோ. 'அந்தணன்' என்பதில் யார் அந்தணன்? என்னும் உண்மை மின்னலடிக்கின்றது. 'கர்ணனும் குந்தியும்' என்னும் சொல்லோவியம் நம் கண்களில் நீரை யெழுப்புகின்றது, 'அந்தக் காலம்' என்ற கவிதையில் காளிதாசனுக்கு டாகூர் புகழ்மாலை சூட்டுகின்றார். இவற்றிற்கெல்லாம் சிகரமாய் நிற்பது 'ஊர்வசி' என்னும் கவிதையே.

இவ்வளவு கற்பனைச் செறிவு கொண்ட இவ்வளவு கருத்துச் சூல்கொண்ட—படைப்புக்களுக்குத் தக்க உருக்கொடுப்பது எளிதன்று. இப்பெருஞ்செயலைச் சாதித்த திரு. த.நா. குமாரஸ்வாமி அவர்கள் வங்கமொழி ஆங்கிலம், தமிழ் வடமொழி – இவற்றில் மிகத் தேர்ச்சி பெற்றவர்; சிறந்த பழுத்த சொல்லாட்சியை உடையவர். இவ்வசன கவிதைகள் செஞ்சொற்களைப் பயிலும் இவருடைய ஆற்றலை நன்கு புலப்படுத்துகின்றன. சான்றாக:

"உள்ள முருக்கும் குழல் இசை யெனப்
பழைய நினைவு பைய வருகிறது
கண்ணீர் முத்தம் சொரிகிறது
இப்புலம்ப லிடை நம்பிக்கை ஒன்று
சுடர் விடுகின்றது
கட்டுக்கு அடங்காதவளே!

என்னும் வரிகள்—ஊர்வசியில் வரும் வரிகள்—செவிநுகர் கவிதை இன்பத்தைத் தருகின்றன. சிந்தைக்கும் செவிக்கும் ஒரு விருந்தை நல்கிய இவரைத் தமிழ் மக்கள் போற்றுவார்கள் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

ரா. ஸ்ரீ. தேசிகன்.

——

ஆங்கில நூல்கள்

கீழ்க்கண்ட ஆங்கில நூல்களை மகிழ்ச்சியுடன், 'போர்ட்ஸ் இண்டர்நேஷனல் இன்கா., 468, பார்க் அவன்யூ, சவுத் நியூ யார்க் 16, (Boarts International Inc,) என்ற நிலையத்திலிருந்து பெற்றுக்கொண்டோம்:

1. 'மென் ஆஃப் சைன்ஸ் இன் அமெரிகா'–பெர்னர்ட் ஜாஃப். (Men of science in America–Bernard Joffe). பதிப்பாளர்: பாபுலர் லைப்ரரி இன்கா.

விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு, சாதனைகள் முதலியவற்றைக் கூறி வரலாற்று முறைப்படி அமெரிக்காவில் விஞ்ஞான வளர்ச்சியை இந்நூல் விளக்குகிறது.

2. 'புலிட்ஜர் ப்ரைஜ் ரீடர்'—(Pulitzer Prize Reader) லியான் எடல் முன்னுரையுடன். பதிப்பாளர் – பாபுலர் லைப்ரரி. ஹெர்சி, ஃபாக்னர், ஃப்ராஸ்ட், பெர்ல் பக், ஜான் எஃப். கென்னடி முதலான 50 பேரின் புலிட்ஜர் பரிசுபெற்ற இலக்கியங்களின் தொகுப்பு.

3. 'ஃபேமஸ் அமெரிக்கன் நீக்ரோஸ்' –லேங்ஸ்டன் ஹ்யூக்ஸ். (Famous American Negroes.– Langston Hughes) பதிப்பாளர்–பாபுலர் லைப்ரரி. சமுதாயத்திற்குத் தலைசிறந்த பணியாற்றிய 17 அமெரிக்கர்களின் வாழ்க்கை வரலாறுகள் அடங்கிய நூல்.

4. 'அமெரிக்கன் லேபர்' ஹென்ரி பெல்லிங் (American Labor – Henry Pelling). பதிப்பாளர்: பாபுலர் லைப்ரரி—அமெரிக்கத் தொழிலாளரைப் பற்றிய தலை சிறந்த வரலாற்று நூல் என்று 'வாஷிங்டன் போஸ்டா'ல் கூறப்பட்ட சிறப்புடையது.

5. 'ஆஸ் வி ஆர்'–ஹென்ரி ப்ராண்டன். (As we Are–Henry Brandon)—பதிப்பாளர்: பாபுலர் லைப்ரரி. 17 அமெரிக்கர்கள்-எழுத்தாளர், ஓவியர், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் - தம்மைக் குறித்தும் நாட்டைக் குறித்தும் கூறுகின்றனர்.

6. 'ஆர்ம்ஸ் கண்ட்ரோல்' (Arms Control) - பதிப்பாசிரியர்: லூயிஸ் ஹெங்கின். பதிப்பாளர்: பாலண்டைன் புக்ஸ். அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் ஆயுதக் கட்டுப்பாடு எப்படிப் பொருந்துகிறது என்பதை 6 பொறுப்பு வாய்ந்த எழுத்தாளர் விளக்குகின்றனர்.

7. 'டு டர்ன் தி டைட்'—ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடி– (To Turn The Tide by President John F. Kennedy.) பதிப்பாளர்: பாலண்டைன் புக்ஸ். ஜனாதிபதியின் அறிக்கைகள் சொற்பொழிவுகளிலிருந்து அவருடைய முதலாண்டுக் குறிக்கோள்களை விளக்கும் நூல். குழப்பம் நிறைந்த நூற்றுண்டில் தலைசிறந்த ஒரு நாட்டின் பிரச்சனைகளைத் தெளிவாகவும் சுவையாகவும் விளக்குகிறது.

மேற்கண்ட எல்லா நூல்களும் மாணவர் சிறப்புப் பதிப்பாக மிகவும் மலிவாக 20 செண்ட் விலையில் வெளியிடப்பட்டுள்ளன.

—ஆசிரியர்.

அண்மையில் வெளிவந்த நூல்கள்

புக்ஸ்(இந்தியா)பிரைவேட் லிமிடெட்,
135, பவளக்காரத் தெரு, சென்னை–21

	ரூ. நபை
தினை விதைத்தவன் —பி. எஸ். ராமையா	6–00
பாஞ்சாலி சபதம் —பி. எஸ். ராமையா	1–50
ஆளப் பிறந்தவர் : ஜார்ஜு வாஷிங்டன்-ஜீனெட் ஈட்டன்	2–50
ரைட் சகோதரர்கள் —ஜீனெட் ஈட்டன்	2–50
சிறந்த சிறுகதைகள் —ஜாக் லண்டன்	4–00
பாண்டியர் வரலாறு —டீ. வி. சதாசிவ பண்டாரத்தார்	3–00

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே, சென்னை–1

உயிரும் ஒளியும் —கோ.வி மணிசேகரன்	3–00
நினைவின் நிழல் —கா. ரத்னம் பி. ஏ. (ஆனர்சு)	3–00
பாண்டியன் திருமேனி —வே. கபிலன்	5–00
அருந்தமிழ் அடிகளார் —புலவர் செந்துறை முத்து	2–00
தங்கத் தாமரை —தாமரைக் கண்ணன்	1–50
ஆபத்தில் சிக்கிய அபலைகள் —மேதாவி	1–50

மல்லிகைப் பதிப்பகம்
8, கோட்ஸ் ரோடு, தி. நகர், சென்னை–17

எதிரொலி —கோமதி சுவாமிநாதன்	2–00
தியாகியின் தாய் —வி. ஆர். ராதாகிருஷ்ணன்	1–75
வியப்புக் கதைகள் —கல்வி கோபாலகிருஷ்ணன்	1–00
ஔவையார் பாடல்கள் —புலியூர்க் கேசிகன் உரை	3–00
மருத்துவ மேதைகள் —ரா. பாலகிருஷ்ணன்	2–00

வள்ளுவர் பதிப்பகம்
855, வடக்கு இராச வீதி, புதுக்கோட்டை.

சிந்து வெளி தரும் ஒளி —க. த. திருநாவுக்கரசு எம். ஏ.	1–50
திருக்குறள் (எளிய பொழிப்புரை) —சி. இலக்குவனர் எம் ஏ., எம். ஓ. எல்.	2–50
தொல்காப்பிய ஆராய்ச்சி —சி. இலக்குவனர் எம். ஏ., எம். ஓ. எல்.	5–00
பழந்தமிழ் —சி. இலக்குவனர் எம். ஏ., எம். ஓ எல்.	4–00

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை–1

வெளிநாட்டு விடுகதைகள் —அழ. வள்ளியப்பா	0–75
இலக்கியக் காட்சிகள் —மு. வரதராசனர்	1–25
செம்மீன் —தகழி சிவசங்கரப் பிள்ளை	5–00
இரண்டு படி —தகழி சிவசங்கரப் பிள்ளை	2–50
ஜூலியஸ் சீஸர் —டி. என். சேஷாசலம்	4–50
கல்ச்சர்--பண்பும் பயனும் —டி. என். சேஷாசலம்	2–50

பழனியப்பா பிரதர்ஸ்
4, வேங்கடேச நாய்க்கர் தெரு, சென்னை–5

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் —மூலம் : திருமதி எட்நா எப்ஸ்டின் —தமிழில் : எம். எஸ். சிவஸ்வாமி	2–00
சாணக்கியரும் சந்திரகுப்தரும் —மூலம் : எஸ். ஏ. பி. ஐயர் —தமிழில் : த. நா. குமாரஸ்வாமி	8–00

Puthaga Nanban

With Best Compliments

from

The Southern Languages Book Trust
25, Sterling Road
Madras 34

Kindly fill the attached form and return it to us for future supply of the Magazine.

....

SUBSCRIPTION ORDER FORM

To

The General Manager,
Southern Languages Book Trust,
25, Sterling Road,
Madras-34.

Dear Sir,

Please enrol me as a subscriber to your quarterly Puthaga Nanban. The annual subscription of Rs. 2/- is sent herewith/separately by Postal order/money order.

Yours faithfully,

Signature

From

Name:

Address:

தமிழ் எழுத்தாளர் யார் - எவர் ?

*

எழுத்துலகின் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுப் பணியாற்றி வரும் 563 தமிழ் நூலாசிரியர்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்துக் கூறும் முதல் நூல் இதுவே.

தமிழ் எழுத்தாளர்களின் பெயர், முகவரி, அவர்கள் அறிந்த பிற மொழிகள், எழுதியுள்ள நூல்கள், மொழி பெயர்ப்புக்கள், மற்றும் சில குறிப்பிடத்தக்க செய்திகள் ஆகியவற்றை இத்தொகுப்பில் காணலாம்.

இத்தொகுப்பின் இறுதியில், பிற மொழிகளில் நூல் இயற்றியுள்ள தமிழ் எழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் ஆகியோர் பட்டியலும், ஆங்கிலத்தில் எழுத்தாளர் பெயர் அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளன.

*

விலை 1 ரூபாய்

(தபால் செலவு தனி)

*

தென்மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டெர்லிங் ரோட்
சென்னை-34

Edited and Published by V. Sundararaj Naidu, for The Southern Languages Book Trust, 25, Sterling Road, Madras-34 and Printed by G. Bhavanarayana at The Weldon Press, 145, T. H. Road, Madras-21.

TRUST SPONSORED PUBLICATIONS

ARE

AVAILABLE FOR SALE ALL OVER THE COUNTRY

★

Sole Distributors for Tamil Books

M/s. S. R. SUBRAMANIA PILLAI,
Publishers and Booksellers,
TIRUNELVELI JUNCTION.
For Tirunelveli, Ramanathapuram, Kanyakumari, Coimbatore, Nilgiris and Salem Districts.

M/s. PALANIAPPA BROTHERS,
Publishers and Booksellers,
Teppakulam Post,
TIRUCHIRAPALLI-2.
For Madurai, Tiruchi and Tanjore Districts.

M/s. PAARI NILAYAM,
Publishers and Booksellers,
59, Broadway,
MADRAS-1.
For North Arcot, South Arcot and Chingleput Districts.

FOR BOMBAY

M/s. POPULAR BOOK DEPOT
Publishers and Booksellers
Lamington Road,
BOMBAY - 7.

FOR DELHI & NEW DELHI

M/s. ATMARAM & SONS
Publishers and Booksellers
Kashmere Gate,
DELHI - 6.

WANTED STOCKISTS IN OTHER IMPORTANT TOWNS

★

Stocks can also be had from :

SOUTHERN LANGUAGES BOOK TRUST

25, STERLING ROAD, MADRAS-34.

12 JUN 1965
MADRAS

SOUTHERN LANGUAGES BOOK TRUST

மலர் :

இதழ் :

செப்டம்பர் : 19

புத்தக நண்பன்

முத்திங்கள் இதழ்

p. 48+44+44+37=173
21-11-65

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1965
MADRAS

வெளியிடுவோர் :

தென் மொழிப்
புத்தக டிரஸ்ட்,
25, ஸ்டெர்லிங் ரோட்,
சென்னை-34.

DIGITIZED
BY
TAMIL VIRTUAL ACADEMY